
www.tamilarangam.net

# சமர்

இதழ் 15 | பங்குனி - சித்திரை | அன்பளிப்பு 10F

## பேச்சு வார்த்தையில் புலிகளின் பலவீனம்

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான சமாதான நல்லுறவு முன்முயற்சியின் 10வது முன்னெடுப்பும், 83 இனக்கலவரத்தின் பின்னாலான சுமார் 12 வருடகால யுத்தத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் 7வது முன்முயற்சியுமான பிரபாகரன் - சந்திரிக்கா பேச்சுவார்த்தையானது இன்று முறுகல் நிலையை எட்டியுள்ளது. இனச்சிக்கல்களுக்கு



இம்முறை எப்படியும் தீர்வைக் கொண்டுவந்து விடுவோமென சூழுரைத்த அரசியல் தீர்வாளர்களதும், சமாதானவாதிகளினதும் முகங்கள் சுண்டிக் கறுத்துவிட்டன.

அரசு - புலிகள் இரு தரப்பினரும் தத்தமது இருப்புக்களை நீண்டகாலம் தக்கவைப்பதற்கும், எதிர் அரசியல் நிலைப்பாடுகள் மற்றும் யுத்தத்தின் மீதான மக்களின் வெறுப்பின் முன்னால் தம்மை சுதாகரித்துக் கொள்வதற்கும், தமது இருப்பின் நீண்ட காலப்பகுதியை யுத்தத்தினூடே கடத்தி வருவதற்கும் ஜனநாயக வேடமிட்டபடி மீண்டும் யுத்தத்திற்கான ஆரவாரங்களைச் செய்யும் அடிப்படையிலேயே *தொடர்ச்சி பக்-18 ல்..*



## புலிகள் சொன்ன இரண்டு கோரிக்கைகள்

அண்மைக் காலமாக புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடந்துவரும் பேச்சுவார்த்தைகள் முறிந்து, தொங்கிக் கொண்டிருக்கின்றன. பேச்சுவார்த்தைக் காலங்களில் புலிகள் செய்வதாகக் கூறிய இரண்டு முக்கிய விடயங்களான முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்துவது, மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது போன்றவற்றை இதுவரை செய்யாது, காலத்தை இழுத்தடித்தும் வருகின்றது புலிகள்.

மேற்படி இரண்டு பிரச்சனைகளும் அரசு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் அல்ல. தமிழ்மக்கள் சம்மந்தப்பட்டதும், தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை *தொடர்ச்சி 17ம் பக்கம்..*

### உள்ளே

1. லெனின் பிறந்த நாள்- மே தினம்- நக்சல்பாரி எழுச்சி
2. தமிழாராச்சி மாநாடா! அல்லது திமிராட்சியின். .
3. மனிதம் நின்று போனதேன்?
4. டென்மார்க் மாநாட்டில் வெளியான உண்மைகள்
5. விவாத மேடை, மற்றும் பல....

வெளியீடு: தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் | பதிவு செய்யப்பட்டது- 3\16956

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பிந்திய செய்தி

# மக்கள் சமாதானம் பற்றி ஏமாற்றத்துடன் தொடங்கிய யுத்தம்

இனவெறி அரசின் கோர முகங்களுக்குள் சிக்கித் தவிக்கும் தமிழ் மக்கள், எந்தவித அற்ப சலுகைகளைக் கூட கேட்டுப் பெறமுடியாது என்பதை நாம் கடந்த சமர் இதழ்களில் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டினோம். இனவெறி அரசு பலாத்கார வழிகளின் மூலம் தமிழ் மக்களை கொன்று தேசிய இன அடையாளத்தை இல்லாது ஒழிக்க முனையும் வரை, அதைத் தமிழ்த் தேசிய இனம் தவிர்க்கமுடியாது ஆயுதம் ஏந்துவதன் மூலம் போராட நிற்பந்தித்து வருவதும் கண்கூடு. இவ்வாறான நிலைமைகளில் கடந்துபோன பேச்சு வார்த்தைகளை ஒட்டி நாம் இவ்வாறான பேச்சுக்கள் சாத்தியமில்லை, தமிழ் மக்களை ஏமாற்றும் மோசடி நிகழ்ச்சி- இது என்பதையும் சுட்டிக் காட்டினோம். தம்மை முற்போக்கு என அழைத்த பலரும் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் பேச்சு வார்த்தையின் போலித்தனத்தை அம்பலப்படுத்தத் தவறி, சமாதானம் பற்றிய சிறிலங்கா அரசின் இனவெறியின் பொய் முகங்களின் பின், தம்மை மறந்து இழுபட்டுச் சென்றவாறே இருந்தனர்.

பேச்சு வார்த்தைகள் தொடர்பாக புலிகள் ஓரளவு அம்பலப்படுத்தலைச் செய்த போதிலும், அவர்களின் அரசியல் ரீதியான தவறு பேச்சு வார்த்தையிலும், அதன் கோரிக்கையிலும் பிரதிபலித்தன. அதன் விளைவு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சந்திரிகா அரசுபற்றி அம்பலப்படுத்தலை சரிவர செய்யத் தவறியது. யூ என் பி, சுதந்திர கட்சி இரண்டும் ஒரே இனவாத அடிப்படையில் உருவான போதும் அதன் முகங்கள் காலம், இடம், சூழலுடன் மாறுபட்டு நிற்பதை புலிகள் காணத்தவறினர். பிரேமதாசாவையும், சந்திரிக்காவையும் ஒரே தட்டில் எடுத்த எடுப்பில் வைக்கமுனைந்தது. பாரிய அரசியற் தவறை செய்ததுடன், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒரே மூச்சில் பின்தள்ளும் வகையிலும் நகர்ந்துள்ளது.

சந்திரிகா அரசு இன்னமும் முற்போக்கு முகமூடி அணிந்த இனவாதியாக உள்ள அதேநேரம், போலி ஜனநாயக மகுடி ஊதியபடியே புலிகளை அம்பலப்படுத்த அனைத்து வழிவகைகளையும் செய்யும் அதேநேரம், தமிழ்மக்களின் உரிமைகளை காலில் போட்டு மிதிக்கவும் திட்டம் தீட்டிச் செயற்படுகிறது. புலிகளின் ராணுவ ரீதியிலான முன்னேறிய தாக்குதல் சரியானதா? என்ற கேள்விக்கு- இல்லையென்பதே ஒரு சரியான அரசியல் முடிவாகும். இராணுவ ரீதியிலான முன்னேறிய தாக்குதல், மற்றும் வெற்றிகள் மட்டும் சந்திரிகா அரசை நிலைகுலைய வைத்துவிடாது. மாறாக அரசியல் ரீதியிலான வெற்றிகளே எப்பொழும் முதன்மையானதும் தீர்க்கமானதுமாகும்.

அரசியற் தீர்வொன்றை முதன்மையாக வைக்கக்கோரி - அரசை அம்பலப்படுத்தி தமிழ், சிங்கள, சர்வதேசத்தோரை தமிழ்த் தேசத்தின் பின் அணிதிரட்டியிருத்தல் வேண்டும். ஆனால் நடந்தவைகளோ எதிர்மறை. முன்னேறிய தாக்குதல் மூலம் முழுமையாக தமிழ் மக்களையும், சிங்கள, சர்வதேசத்தையும் மௌனமாக்கியுள்ளது. உலக பிற்போக்கு அரசுகள், விதிவிலக்கின்றி சிங்கள இனவெறியர்களும், தமிழ்த் துரோகக் குழுக்களும் தமிழ்த் தேசவிடுதலைக்கு எதிராக இத் தாக்குதல் மூலம் குரல் கொடுத்ததை காணமுடிகிறது. விடுதலையின் பால் ஆர்வமுள்ள குரல்கள் எல்லாம் இதற்குள் கேட்கமுடியாது அடங்கிப் போய்விட்டதையும் காணமுடியும்.

இனி உள்நாட்டிலும் சர்வதேசங்களிலும் புலிகள் பல பாரிய பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதுவரை காலமும் புலிகளிடம் சர்வதேச ரீதியில் கேட்க்கப்படும்- புலிகளுக்கு எதிரான கேள்விகள் ஜனநாயக மீறல்கள், கைதுகள், போன்றவை தொடர்பாகவே இருந்துவந்தன. ஆனால் எதிர்காலத்தில் முக்கியமாக 'சமாதானத்தை குளப்புபவர்கள்' என்ற அடிப்படையில் கேள்விகளை எதிர்நோக்கும் வகையில் நகர்ந்துள்ளது. இது தமிழ்த் தேசிய விடுதலையை கேள்விக்கு உள்ளாக்கிவிடும். இதை பி பி சி - பிரபாகரனிடம் பேட்டி கண்டபோது மீண்டும் மீண்டும் இதற்குள்ளேயே கேள்விகள் கேட்கப்பட்டதில் காணமுடியும். இதன் மூலம் புலிகள் எதைச் சொன்னாலும் புலிகளை அம்பலப்படுத்துவதில் இக்கேள்விகள் அமைகின்றன. இது சர்வதேச அபிப்பிராயத்தை சந்திரிகா என்ற போலி முகமூடியின் பின்னால் அணிதிரட்டவே அடிப்படையாக அமைகின்றது.

சந்திரிகா அரசானது தாக்குதலின் பின் கூட யுத்தப் பிரகடனம் செய்யாது - சமாதானம் பற்றி வாய்ப்பந்தல் போடுக் கொள்வது சர்வதேச உலகம் முழுவதையும் தன் கருத்தின் பின்னால் இழுத்துவைக்கும் ஒரு முக்கிய முன்முயர்ச்சியாகும். (6ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏப்-22: லெனின் பிறந்த நாள்
# மே-1: மே தினம்
# ஏப்-22: இந்திய ஆயுதப் புரட்சிக்கு வித்திட்ட நாள்

• லெனினின் பிறந்த நாள்

லெனினின் 126வது பிறந்த நாளை நாம் நினைவு கூர்கின்றோமெனின், ஏன்? 1917ல் உலகில் பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக உயர்த்திக் காட்டியவர் லெனின் என்பதனாலேயே அவரின் பிறந்த தினத்தை ஒரு புரட்சிகர நாளாக நினைவு கூர்கின்றோம்.

சோவியத்தில் லெனின் தலைமையைத் தொடர்ந்து ஸ்டாலின் பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் தொடர்ந்ததுடன், அதைப் பாதுகாப்பதிலும் உறுதிபட்டு நின்றார். அதைத் தொடர்ந்த குருசேவ்-பிரசேனேவ் கும்பல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை கைவிட்டு முதலாளித்தவ மீட்டை ஏற்படுத்தி பாட்டாளி வர்க்கம் - ஆளும் வர்க்கம் என்ற ஸ்தானத்தை ஒழித்துக்கட்டினர். இன்று யெல்சின் கும்பல் அனைத்து போலி மார்க்சிய அலங்காரங்களிலும் இருந்து தன்னை முற்றாக அவிழ்துக்கொண்டு வெளிப்படையாகவே ஏகாதிபத்தியத்தின் ஒரு நவ காலனியாக சோவியத்தை மாற்றுவதில் வீறுநடை போடுகின்றார்கள்.



ஏகாதிபத்தியங்களோ “கம்யூனிஸம் தோற்றுவிட்டது” என வாய்புலம்பியபடி மக்களைச் சுரண்டுபவர்களை எதிர்த்துப் போராடுபவர்களை பயங்கரவாதிகள் எனக்கூறி அழித்து வருகின்றனர். முதலாளித்துவமே உலகில் நிலையானதும், இறுதியானதுமான ஒரு சமூக அமைப்பென அழுதுவடிக்கின்றனர். முதலாளித்துவமே மனித உரிமைகளை மதிப்பதும், ஜனநாயகத்தை கொண்டதுமென பீற்றி வருகின்றனர். ஆனால் யதார்த்தத்தில் முதலாளித்துவத்தின் அழிவும், குளிசறைத் தனமான அதன் சமூக அமைப்பும் நாற்றமெடுத்து வருகின்றது.

ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்காக பெரும் சொத்துடைய வர்க்கத்தின் வாழ்வை பாதுகாக்கவும், மனித உரமைமையெனவும், ஜனநாயகமெனவும் கூறிக்கூறி தமது சுரண்டலை தொடர்கதையாக்கி வருகின்றனர். மூன்றாம் உலக நாடுகளெல்லாம் வறுமைக்குள் உட்பட்டு பட்டினிச் சாவுகளை தமது சமூக வெளிப்பாடுகளாக்க உட்படுத்தியுள்ளது, இவ் முதலாளித்துவ சமூக அமைப்பு. சோமாலியா முதல் அனைத்து மூன்றாம் உலகமக்களும் தமது உழைப்பையும், தமது மூலவளங்களையும் இவ் ஏகாதிபத்தியங்களக்குத் தாரைவார்க்கும் வகையில் முதலாளித்துவ . சமூக அமைப்பை ஏற்படுத்தி வைத்ததுடன், அதை ஏற்றிப் போற்றியும் வருகின்றன. முதலாளித்துவத்தை மீட்ட சோவியத் முதல் கிழக்கு ஐரோப்பா வரை முதலாளித்துவ ஆட்சியை இன்று கொண்டுள்ளனர். முதலாளித்துவமே ஜனநாயகமானது எனின்: ஏன் இன்று இந்நாடுகளில் பசியும்-பட்டினியும், இனக்குரோதங்களும்-இனப்படு கொலைகளும், விபச்சாரங்களும்-சீரழிவுகளும், பரதேசிகளும்-பாமரர்களும், அடக்குமுறை அட்டகாசங்களும், சண்டையும், சச்சரவுகளும் விளைவாகக் கொடுத்துள்ளன. இதுதானா முதலாளித்துவத்தின் உன்னதமான விளைவுகள்?

முதலாளித்துவத்தில் உழைக்காதவன் பெரும் பணக்காரனாகவும் வசதியானவனாகவும் வாழும் போது அவனுக்கு உழைத்துக் கொடுப்பவன் பட்டினியிலும் கீழ்நிலையிலும் வாழ்கின்றான். இந் நாற்றம் முதலாளித்துவ சமூக அமைப்பிலிருந்து ஊற்றெடுக்கும் சாக்கடையே. ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதை உணர்ந்த லெனின் முதலாளித்துவத்தின் மீதான தனது விடாப் பிடியான போராட்டத்தின் மூலம் அதைத் தகர்த்தெறிந்ததுடன், பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக நிறுவினார். இன்று முதலாளித்துவம் மீட்கப்பட்ட போதிலும் மக்கள் தினம் தினம் இதற் கெதிராக வீறுடன் போராடிவருகின்றனர். நாம் லெனினின் உறுதிமிக்க பாதையை உயர்த்தியபடி முதலாளித்துவ வர்க்கத்தையும் அதன் அனைத்துவகை ஒடுக்குமுறைகளையும் தகர்த்து, பாட்டாளி வர்க்கத்தை ஆட்சியதிகாரத்தில் நிறுத்த வேண்டும். அதற்காக நாம் என்ன செய்யப் போகின்றோம்? சுரண்டலை ஒழித்துக்கட்ட நாம் என்ன செய்யப் போகின்றோம்?

## • மே தினம்

19ம் நூற்றாண்டின் இறுதிகளில் 'சிக்காக்கோ' நகரத் தொழிலாளர்கள் கிளர்ந் தெழுந்த நாள் மட்டுமின்றி, அன்றே 8மணி வேலைநேரத்தை சட்டப்படி போராடிப் பெற்றனர்.

இவ் முதலாளித்துவ அமைப்பில் கொள்ளைக்காக தொழிலாளர்களை கசக்கிப் பிழிந்து பட்டினிச் சாவுக்குள் வைத்தபடி அவர்களின் வேலை நேரத்தை 10-16 மணித்தியாளங்களாக வைத்திருந்தனர். இந்தநிலையில் சிக்காக்கோ மக்கள் போராடி தமது இன்னுயிரைத் தியாகம் செய்து 8 மணி நேரத்தை சட்டப்படி பெற முடிந்தது.

இந்த 8 மணி நேரவேலையை அவர்கள் பெற்றிருந்த போதிலும் உலகில் அவை அமுல்படுத்தப் படவில்லை. ஏன் பிரன்சில் 1960 களில் பிரான்ஸ் தொழிலாளார்களின் ஒருநாள் வேலைநேரம் 10 மணித்தியளங்களாக இருந்தது. சம்பளம் ஒரு மணித்தியாலத்திற்கு 2.5 F முதல் 3 Fகாக இருந்தது.

இன்று ஒரு கிழமை வேலைநேரம் பிரான்சில் 39 மணி நேரமாக இருக்க, ஜெர்மனியில் 35 மணி நேரமாகவுள்ளது. பிரான்சில் விடுமுறை நாட்கள் 5 கிழமைகளாக இருக்க, கனடாவில் 2 கிழமைகளாகவுள்ளது. பிரான்சில் வைத்தியச் செலவில் 60சத விகிதத்தை அரசு கொடுக்கின்றது. (இதற்குப் பெறப்படும் பணம் எமது சம்பளத்தில் வரியாக எடுப்பதே). ஆனால் அமெரிக்காவில் இவ்வாறு மருந்துவ வசதிகள் இல்லை. இதுபோன்று நாட்டுக்கு நாடு வேறுபட்ட வாழ்நிலையும், தொழிலாளர் உரிமைகளையும் கொண்டுள்ளனர்.

இன்று நாம் 8 மணிநேர வேலை செய்கின்றோம் எனின்: பல தொழிலாளர்கள் பல நீண்டவரலாற்றில் போராடி இரத்தம் சிந்திப் பெற்றவைகளே. இதை நாம் மறக்க முனைவதென்பது 8 மணி வேலை நேரத்தை இழந்து எமது சலுகைகளை இழப்பதில் இட்டுச் செல்லும். இன்று போராடிப் பெற்ற சமூக உதவிகள் படிப்படியாக வெட்டப்பட்டு வருகின்றது. ஏன் எமது இன்றைய சம்பளத்தில் புதிய வரிகளின் ஊடாக 150F ஐக் கூட நாம் இழந்துள்ளோம்.

இம் மே நாளை களியாட்ட விழாவாகவும், சிரழிந்த காலச்சாரமாக்கவும் முனையும் ஏகாதிபத்தியங்களும், பிழைப்புவாத சிரழிவுக் கட்சிகளும், இம்மக்களின் போராட்ட நாளை மழுங்கடிக்க முனைகின்றனர். இது ஒருபுறம் நடைபெற இந்நாளை புரட்சிகரமாக முன்னெடுக்கும் போது துப்பாக்கிப் பிரயோகம் மூலம் படுகொலைகளை நிகழ்த்தி அடக்குமுறைகளை கையாள்கின்றனர்.

மே-1 ஐ களியாட்ட விழாவாக இலங்கையில் நடத்திவரும் ஆளும் வர்க்கங்கள் தொழிலாளர்களின் களியாட்டவிழாவாக இனங்காட்ட முனைகின்றனர். 93ல் பிரேமதாசா களியாட்ட விழாவாக மே நாளை மாற்ற முற்பட்ட அன்றையதினத்திலே குண்டுவெடியில் கொல்லப்பட்டார். மே-1 என்பது உழைக்கும் வர்க்கத்தின் புரட்சிகர நாள்! அது நாம் வென்றெடுத்த வெற்றிகளைக் கொண்டாடும் நாள்! புதிதாக வெல்லப்பட வேண்டியவற்றுக்காக போராடும் நாள்! அதுவே மே-1,மே தினம்.

## • நக்சல்பாரி எழுச்சி

1969ல் ஏப்பிரல்-22ம் திகதியே நக்சல்பாரி போராட்டத்திற்கு வித்திட்டநாள். இந்தியா புரட்சிக்கான வித்துக்களை ஊன்றியநாள்.

இந்தியப் புரட்சி குறியாக இலங்கைப் புரட்சிக்கு அடிப்படையானது. எமது போராட்டத்தில் எமது இயக்கங்கள் ஆளும் வர்க்கங்களின் கால்த்தூசைத் தட்டியபடி இந்தியப் புரட்சியாளர்களையும், இந்திய மக்களையும் நிராகரித்து ஏகாதிபத்திய விசுவாசத்தை காட்டி நின்றனர்.

1969களில் மேற்கு வங்காளத்தில் நக்சல்பாரி கிராமத்தில் தமது புரட்சிகர அடித்தளத்திற்கான முதல் எழுச்சியை நடாத்தினர். மார்ச்-2 1967ல் காங்கிரஸ் கட்சியை முறியடித்து வலது இடது கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு வங்காளத்தில் ஆட்சிக்கு வந்தனர்.

இதைத் தொடர்ந்து மக்கள் அக்கட்சிகளிடம் நிலப்பறிப்பைக் கோரினர். ஆனால் பாராளுமன்ற ஆட்சியாளர்கள் தமது வர்க்கக் குணத்தை இனம்காட்டி ஒடுக்கப்பட்ட மக்கள் மீது வன்முறையை கட்டவிழ்து விட்டனர்.

இதைத் தொடர்ந்து மக்களின் கோரிக்கைகளை நிராகரித்து வந்த வலது இடது கட்சித் தலைமைப் பீடம் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்து விட்டனர். இதனால் கட்சிப் பீடத்துக்குள் உடைவுடன் புதிய ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சியை அமைத்துக்கொண்டனர். இவர்களின் தலைமையில் மேற்கு வங்காள மக்கள் ஆயுதம் தாங்கிப் போராட்டத்தைத் தொடங்கினர். பல இடங்களைக் கைப் பற்றியதுடன், பொலிஸ் குண்டர்படை நிலை யங்களையும், நிலப்பிரபுக்களையும், கொடும் வட்டிக்காரர்களையும் ஒழித்துக்கட்டினர். நிலம் மீளப் பங்கிடப்பட்டது. இதனூடாக பலலட்சம்


நக்சல்பாரி கூட்டமைப்பு(AIPRF) பேரணி மார்-94 கல்கத்தா

மக்கள் ஆயுதம் ஏந்தியதுடன் மக்கள் நீதிமன்றங்களையும் உருவாக்கி புதிய அரசை அமைத்துக் கொண்டனர்.

இப் போராட்டம் பின்னால் இந்திய ஆட்சியா ளர்களால் ஏகாதிபத்தியத்தின் துணையுடன் கடும் ஒடுக்குமுறைக்கு உள்ளானது. இன்றும் கூட பல ஆயிரம் பேர் சிறைகளில் வதைக்கப் படுகின்றனர். அன்று விதைத்த விதை இன்று பலவாகப் பெருகி பல தளப்பிரதேசங்களை இந்தியாவின் பலபாகங்களிலும் அமைத்துப் போராடி வருகின்றனர். இந்தியப் புரட்சியின் புரட்சிகர அமைப்புகள் இன்று எழுச்சிபெற்று வருகின்றன.

இந்தியப்புரட்சி ஆசியாவின் விடுதலையாகவும், இலங்கையின் விடிவிற்கும், தமிழீழத்தின் விடி விற்கும் மிகமிக அவசியமானது. இந்தியப் புரட்சியின் வெற்றிக்காக நாம் உழைக்கும் அதேநேரம் அதுவே தமிழீழத்தின் விடிவையும் உறுதிப்படுத்தும் என்பதையும் மறந்துவிட முடி யாது. தமிழீழ விடுதலை என்பது இந்தியப் புரட்சியுடன் ஒன்றுபட்டது.

---

## வாரமொன்றிற்கு ரீவி மூலம் 8000 கொலைகளைப் பார்க்கும் மனிதன்..

உலகின் ஜனநாயகக் காவலர்களாக வேட மிட்டு அலைந்து திரியும் ஏகாதிபத்தியங்கள் பயங்கரவாதம் பற்றி நிறையவே கூச்சல்போட்டு வருகின்றது. உண்மையில் இவ் வன்முறைகளின் ஊற்றுமூலம் இவ் ஏகாதிபத்தியங்களின் இருப்பின் மீதே உள்ளதை மறைத்து, அதை ஊக்கப்படுத்துவதில் மிகவும் தீவிரமாக உள்ளனர்.

தொலைக் காட்சிகளில் வன்முறைக் காட்சிகளைப் பெருக்கி இளஞ் சந்ததியினர் மத்தியில் வன்முறையை ஒரு சாதாரண நிகழ்ச்சியாக காட்டிவிடுவதனூடாக ஏகாதிபத்தியங்களே வன்முறைக்குத் தூபமிட்டு வருகின்றனர். பின்னர் இதே வன்முறையினூடாகவே உலகைச் சல்லடையிட்டும் அடக்கி வருகின்றனர்.

அமெரிக்காவில் சிறுவருக்கான தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் 32 வன்முறைச் சம்பவங்கள் காட்டப்படுகின்றன. வயது வந்தவர்களுக்கான நிகழ்ச்சிகளில் 6 வன்முறைச் சம்பவங்களுமாக, வாரம் ஒன்றுக்கு ஏறக்குறைய ரீவி மூலம் 8000 கொலைகளை ஒரு மனிதன் பார்த்து வருகின்றான். தொலைக் காட்சி நிகழ்ச்சிகளினூடாக வன்முறைகளைப் பெருக்கி மக்களை வன்முறைச் சமூகமாக மாற்றுவதில் இவ் ஏகாதிபத்தியங்கள் வெற்றி பெற்றுள்ளன.

தொலைக் காட்சிகள் ஏகபோகமாக மாறி இன்று உலகெங்கும் ஆதிக்கம் செலுத்துவதால் மிக வறுமையான மூன்றாம் உலகநாடுகளிலும் வன்முறை ஆதிக்கத்தைப் பரப்புவதில் கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளது. இதன் மூலமாக மூன்றாம் உலகநாடுகளில் ஜனநாயக வழிகளை இல்லாது ஒழிப்பதுடன் வன்முறையினூடாக இந்நாடுகளை குட்டிச்சுவராக்கி தமது வயிற்றுப் பிழைப்பை நடத்திவருகிறது.

பிலிப்பைன்ஸ் இல் தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்த 7 வயதுச் சிறுவன், அவ் அலைவரிசையை மாற்றியதற்காக அவ்வீட்டின் பணிப்பெண்ணை சுட்டுக் கொன்றுள்ளான்.

உலகை வன்முறைக்குள் மூழ்கடித்து, பாலியல் வக்கிரக் காட்சிகளின் மூலம் பெண்கள் மீதான வன்முறையை ஊக்கு வித்து உலகை சாக்கடைக்குள் கரைத்து விடுவதில் ஏகாதிபத்தியங்களே பிரதான காரணிகளாக உள்ளன. ஜனநாயகமென மக்கள் காதுகளில் பூ வைக்கும் இவர்களே மிகப் பயங்கரமான மனிதகுல எதிரிகளை உருவாக்கும் கொலையாளிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(2ம் பக்கத் தொடச்சி)
இராணுவத் தாக்குதலில் முந் துவது என்பது- சரியான ஒரு நேரத்தில் சர்வதேச அனுதா பத்தை தமிழ்த் தேசியத்தின் பின்னால் அணிதிரட்டலுன் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இன்றைய நிலை தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை மேலும் ஓர் அடி பின்தள்ள வைத்துள்ளது. இதைப் புலிகளின் தவறான அரசியலில் உள்ள பிரச்சனையாக இருப்பதை நாம் காணமுடியும். இது வெறும் புலிகளின் பிரச்சனைக்குள்ளும் நின்றுவிடாது மொத்த தமிழ்ச் சமுகத்தையும் பிரதிபலிக்கும் என்பதையும் நாம் காணத் தவறக் கூடாது.

# தமிழ் ஆராச்சி மாநாடா? அல்லது திமிராட்சியின் மாநாடா?

அண்மையில் 8வது தமிழாராய்சி மகாநாடு என்று அறிவித்து, தமிழ் மொழியின் பெயரால் கோடி கோடியாக கூத்தாடிகள் ஆடி மகிழ்ந்தனர். தமிழைப் பரப்புகின்றோம் என்று சில சீரழிவு எழுத்தாளர்களும், சினிமா கவர்ச்சி நடிகர்களும், சூதாடிகளும் கூடித்திரண்டு கூத்தாடி தமிழை இழிவு செய்ததுடன், தமிழ் மொழியின் வளர்ச்சிப் பாதையின் குரல்வளையை கடித்துக் குதறியும் வருகின்றனர்.

மலேசிய தனிநாயகம் அடிகளின் முன்முயற்சியால் முதலாவது மாநாடும், தமிழ் நாட்டில் அண்ணா காலத்தில் நடந்த 2வது மாநாடும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு தன்னால் இயன்றளவு செய்யமுடிந்தது. தமிழ்நாட்டில் நடந்த தமிழாராய்ச்சி மாநாடுகளை விட ஏனைய எல்லா மாநாடுகளும் ஓரளவிற்கு தமிழ் மொழிக்கு சேவைசெய்ய முன்னின்ற போதிலும், அண்ணாவுக்குப் பின் தமிழ்நாட்டில் நடந்த மாநாடு கள் அனைத்தும் அரசியற் கட்சி மாநாடுகளாகச் சீரழிந்து அரசியல், பதவி பந்தம் பிடிப்போர், அரை வேட்காட்டுக்காரர்கள், சீரழிவு விளம்பர எழுத்தா ளர்கள், சினிமா நடிகை- நடிகர்களின் விபச்சார மதன மாளிகைகளாக மாறியதுடன் சீரழிந்தது.

1974ல் நடந்த யாழ்.தமிழாராய்ச்சி மாநாட்டை இன்று ஆட்சியிலுள்ள இதே சுதந்திரக் கட்சி நடத்த விடாது தடுத்ததுடன் சிலருக்கு விசா கொடுக்காது மாநாட்டில் கலந்து கொள்ளத் தடைவிதித்தது. மாநாட்டின் மக்கள்கூட்டம் மீது தாக்குதலை நடத்தி, சிலரைக் கொன்று தீர்த்ததுடன் தமிழினத்தின் ஆயுத எழுச்சி போராட்டமாக அது வெடித்தது.

இந்நிலையில் இத் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்திய இந்திய அரசு, தனது தொங்குதசைகளாக இயக்கங்களை வளர்த்து களத்தில் இறக்கியது. இயக்க மோதல்கள், இந்திய சார்புக் குழக்களை இல்லாதொழித்துவிட நேரடியாக இறங்கினர், இந்திய ஆட்சியாகர்கள். இந்திய ராணுவப் படுகொலை நிகழ்த்தியும், சித்திர வதைகளைச் செய்தும், பெண்களை கற்பழித்தும், கட்டிங்களைத் தகர்த்தெறிந்தும் வெறியாட்டம் போட்டனர். இதன் மூலம் தமிழினத்தை அடக்கிவிட முடியவில்லை. வெற்றி பெறவும் முடியாமற் போ கவே பின்வாங்கித் திரும்பிப் போனார்கள். இதைத் தலைமை தாங்கி நடாத்திய அன்றைய பிரதமர் ராஜீவ்வை படுகொலை செய்ததன் மூலம் புலிகள் இதனை பழிவாங்கலாக இனம்காட்டினர்.

இந்நிலையின் பின்னர் மொத்தத் தமிழ் மக்களையும் தமிழ் நாட்டு பாஸிச ஜெயலலிதா அரசு புலிகளாகக் காட்டி கைதுகளையும், சித்திர வதைகளையும், செய்ததுடன் திறந்தவெளி சிறைக் கூடங்களில் அப்பாவி மக்களை அடைத்து வதைத் தனர். இந்நிலையில் 8வது தமிழாராச்சி மாநாடு அறிவித்தல் வெளிவந்ததைத் தொடர்ந்து, இலங்கை யில் தமிழ் பிரமுகர்களுக்கான அழைப்புகள் நிராக ரிக்கப்பட்டன. இலங்கை தமிழாராச்சி மாநாட்டுக் குழுவுடன் ஒரு முரண்பட்ட நிலையில் அறிக்கைகள் வாயிலாக மாறிமாறித் தாக்கினர். இது நிகழ்ந்த அதேநேரம் தமிழ்நாட்டில் தமிழ் பற்றுள்ள, தமிழா ராட்சியில் அதிகளவு ஈடுபாடுள்ள உண்மையான ஆராட்சியாளர்கள் இம்மாநாட்டை விமர்சித்து அதில் கலந்து கொள்ளாது உதறித்தள்ளினர்.

எங்கயடா என்று திரிகின்ற கூத்தாடிகளும், ஆல வட்டக் கோஸ்டிகளும் கூடி மாநாட்டை அறிவித் தனர். இலங்கைத் தமிழ்த் துரோகிகளான சூதாடிக் கும்பல் கலந்து கொள்வதற்கான வேண்டுகோள்கள், மற்றும் நேச அறிக்கைகளோடு அலைந்தனர். கூத்தா டிகளும், சூதாடிகளும் சேர்ந்து வடித்துக் கட்டி சிவத்தம்பி போன்றோரை அழைத்தனர். இந்தத் துரோகி சிவத்தம்பியும் விழுந்துகட்டிக் கொண்டு, தொண்டமான் போன்ற சூதாட்ட அரசியல் வாதிகளுடன் கலந்துகொள்ள சென்னை சென்றனர். அங்கு தமிழ் நாட்டரசு இவர்களைத் திருப்பியனுப்பி புறக்கணித்தது. அதேநேரம் இலங்கை அரசியல் சூதாடிகளுடன் மாநாட்டை நடாத்தி முடித்தது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில் சிவத்தம்பி போன்றோர் கலந்துகொள்ளச் சென்றது தமிழ் இனத்துக்குச் செய்த துரோகமாகும். அன்று இலங் கை- இந்திய ஒப்பந்தம் நடந்தபோது துரோகக் கும்பல்கள் எப்படி இந்திய அரசில் தொங்கி துரோ கத்தை இழைத்ததோ அதுபோன்ற ஒரு துரோகமே இதுவாகும். தமிழாராட்சி மாநாடு இதுவரை என்ன செய்தது என்று இந்தச் சிவத்தம்பியும் ➲




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதையும் கூறமுடியாத இன்றைய நிலையில் முண்டியடித்துச் சென்றது ஓர் ஆச்சரியமான விசயமேயல்ல. இத் தமிழ் ஆராட்சி மாநாட்டை விமர்சித்து போட்டி மாநாட்டை தமிழீழத்தில் நடத்தியிருக்க முடியும். தேசிய விடுதலைப் போராட்டம் நடக்கும் இன்றைய நிலையில், தமிழ் ஆராட்சிக்கும், அதன் வளர்ச்சிக்கும் தமிழீழம் பெரிய பங்களிப்பைச் செய்யமுடியும். புலிகளின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவரான சிவத்தம்பி தமிழ் மொழிக்கு ஏதாவது செய்ய வேண்டுமெனக் கருதியிருப்பின்: புலிகள் மூலமாக ஒரு மாநாட்டை, ஆராட்சியை முடக்கி விட்டிருக்க முடியும். இதைப் புலிகள் ஒருக்காலும் நிராகரித்திருக்க மாட்டார்கள்.

இதைச்செய்ய சிவத்தம்பிக்கு தமிழாராட்சி என்றால் என்னவென்று தெரியாததேயாகும். தமிழில் போட்டுக்களை போடுவது, வாழைமரம் வளைத்துக்கட்டுவது, தென்னை மரம் கட்டுவது, பெரிய அலங்கார ஊர்திகளைக் கொண்டு செல்வது போன்றவற்றுக்கு அப்பால் சிவத்தம்பிக்கோ, புலிகளுக்கோ தமிழ் வளர்ச்சி பற்றிய மேலதிக எண்ணம் எதுவும் கிடையாது. தமிழ் ஆராட்சி மீதான ஓர் உந்துதலை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லின்: சிவத்தம்பிக்குப் பதிலாக பல தமிழ் பற்றுள்ள ஆராட்சியாளர்கள் வெளிக்கிளம்பி வருவர். இன்று இந்தியா, இலங்கையில் தமிழ் மொழி என்ற பெயர் இருந்த போதும் ஆங்கில மோகமும், ஆங்கிலம் தெரியாதோர் புறக்கனிக்கப்படுவதும் சாதாரண நிகழ்வுகள். இதேநேரம் இதைச் செய்துவரும் அரசியல் சூதாடிகளோ தமிழாராட்சி மாநாட்டைக் கூட்டி, கூத்தாடி



அழிக்கின்றனர். ஆங்கில மோகத்துடன் தமிழ் மொழி வளர்ச்சி என்ற பெயரால் இன்னொரு பக்கத்தில் ஆங்கில எழுத்துகளை - தமிழ் மொழி எழுத்துகளின் பற்றாக்குறைக்கு பதிலாக புகுத்த முனைகின்றனர்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு மிகமிக அவசியமானது பொருளாதார, அரசியல், அறிவியல்-பண்பாட்டுத் துறையிலான தங்குதடையற்ற மாற்றங்கள்தான். அதுவரை தமிழ் ஆராச்சியில் வளர்ச்சி சாத்தியமில்லை. சில சீர்திருத்தங்களையும், வெறும் பேப்பர்களில் எழுதி வைப்பதற்கும் அப்பால் எதுவும் நடந்து விடாது. தமிழ் வளர்ச்சி என்று கூறி சமய (மத) நிகழ்ச்சிகளை தமிழ் மொழியின் வளர்ச்சியின் அம்சங்களாகத் திரித்து ஒரு சமய விழாவாக இன்னொரு கூட்டம் சீரழித்து கொச்சைப்படுத்துகிறது.

நாட்டுப்புற, கிராமிய மக்களின் இலக்கியங்களையும், தமிழ் பாரம்பரிய கிராமிய, கேந்திர தொடர்ச்சிகளையும் புறக்கணித்து தமிழுக்கு புதிய விளக்கங்களை சமய மூலமாகவும், சூதாடிகளின் மூலமாகவும் பூச்சிட்டு, தமிழ் கொச்சைப் படுத்தப்படுவது நிகழ்ந்து வருகின்றது. இவ் ஆங்கில மோகவாதிகளான சூதாடிகளின் மாநாட்டை விமர்சித்து புரட்சிகரமான வழிமுறைகளில் பொருளாதார, அரசியல், அறிவியல் - பண்பாட்டுத் துறைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே தமிழ் மொழியை தங்குதடையற்ற வளர்ச்சிக்கு உட்படுத்த முடியும்.

## அமெரிக்க ஒலிபரப்பு நிலையமான ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' மீது மக்கள் தாக்குதல்

அமெரிக்கா தனது கொள்ளைகளையும், அடக்கு முறைகளையும், அடாவடித் தனங்களையும் நியாயப் படுத்த் ஆசியாவுக்கொன்றே உருவாக்கி வரும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' என்ற ஒலிபரப்பு நிலையத்தை, சிலாபம்-இரணவலையில் அமைத்து விஸ்தரித்தும் வருவது உலகறிந்த விடயமே.

இக் கட்டிட வேலைகள் தொடங்கிய காலம் முதல் தமது விவசாய நிலங்களை சிறிதுசிறிதாக இழந்து வரும் அப்பகுதி விவசாய மக்கள், இவ் ஒலிபரப்பு நிலையத்தை முற்றாக அகற்றி, தமது சொந்த நிலங்களை மீட்டெடுப்பதற்காக தொடர்ச்சியாகப் போராடி வருவதும் உலகறிந்த விடயமே.

கத்தோலிக்க திருச்சபையால் இம்மக்களின் நியாயமான போராட்டம் பலவகைகளிலும் குழப்பியடிக்கப்பட்ட போதிலும், இதைமீறிய மக்களின் தன்னெழுச்சியான தொடர்ச்சியான போராட்டத்தின் மீது அண்மையில் பொலிஸ் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு ஒரு விவசாயி பலியானார் என்பதையும் சமர் முன்னர் எழுதியிருந்தது. கத்தோலிக்க திருச்சபை சார்பாக தலையிட்ட ஆயர் பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ மக்களின் அத்துமீறலைக் கண்டித்ததுடன், மக்களை அமைதிகாக்க வேண்டுகோள் விடுத்து ஆசி வழங்கிய அதே கைகளால், அரச இராணுவத்திற்கும் ஆசி வழங்கியுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையானது தனது கட்டுபாட்டுக்குள் போராட்டத்தைக் கொண்டுவர இன்றுவரை முனைந்தபோதிலும், போலியான வழிநடத்தலின் மூலம் தம்மை ஏமாற்றுவதை உணர்ந்த மக்கள், தன்னியல்பான தமது போராட்டதின் மூலம் 'வொய்ஸ் ஒவ் அமரிக்கா' ஒலிபரப்பு நிலையத்தைத் தாக்கினர். இத்தாக்குதலால் அரசுக்கு 2 லட்சம் ரூபா பொருட்சேதம் ஏற்பட்டது. கத்தோலிக்க ஆயர் பெர்னாண்டோ இதை வன்மையாகக் கண்டித்து அமெரிக்காவுக்கான தனது விசுவாசத்தை மீண்டும் ஒருமுறை பறைசாற்றியுள்ளார். அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு கட்டிட வேலைகளை அரசு தடுக்குமாயின் பொருளாதார உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படுமென தனது பாணியில் எச்சரிக்கை விட்டுள்ளது. அமெரிக்காவின் ஆதிக்கம் இலங்கைமீது நேரடியாகவே உள்ளது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்ட, வெளிநாட்டமைச்சின் எச்சரிக்கையும், மதவாதிகளினது. கூக்குரலும் போதுமானதாவே உள்ளது..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதம் நின்றுபோனதேன்?!

சுவீஸ்சில் இருந்து ஆாப்பாட்டமாக வெளி வந்துகொண்டிருந்த மனிதம் பத்திரிகை தனது 30வது இதழ்களுடன் வெளிவராது என்ற அறிவித்தலுடன் நின்றுபோனது. இதற்கு முன்னரே மனிதத்தின் முரண்பாடுகள் தொடர் பான சில செய்திகள் வெளிவந்து கொண் டிருந்தபோதிலும், மனிதம் தனது 30வது இதழில் இதற்கான சில காரணங்களை முன் வைத்திருந்தது.

*சொல்லுக்கும் - செயலுக்கும், எழுத்துக்கும் - நடத்தைக்கும், இடையில் விரிசல்கள்!* என மனிதம் நின்றுபோவதற்கான காரணங்களை ஒப்புவித்திருந்த போதிலும், மனிதத்தின் மீதான சமரின் தொடர்ச்சியான விமர்சனங்களை மனிதம் கவனத்திலெடுக்கத் தவறி அசட் டைசெய்ததன் எதிர் விளைவே இதனொரு கார ணமென சமர் சுட்டிக்காட்ட விரும்புகின்றது. ஆயினும், மனிதம் நின்று போவதென்பது இன்றுள்ள நிலைமைகளில் ஈழவிடுதலைப் போராட்டத்திற்குப் பாதகமான அம்சம் என் பதையும் மறுபுறத்தே சமர் சுட்டிக் காட்டுகின்றது. இதைத் தவிர்த்து, மனிதத்தைத் தொடர்ச்சியாகக் கொண்டுவர அதற்கான குறைந்தபட்ச திட்டத்தைக் கொண்டு மீண்டும் முயலவேண்டும் என்பதும் சமரின் எதிர்பார்ப் பாகும்.

மனிதம் நின்று போவதென்பது அவர்கள் குறிப்பிடும் சொல்லுக்கும் - செயலுக்கும், எழுத்துக்கும் - நடத்தைக்கும், இடையில் விரிசல் என்ற வியாக்கியானமே பிரதிபலித்து நிற்கின்றது. இவைகளைக் கடைப்பிடிக்க மனிதமானது ஒரு திட்டத்தை என்றுமே கொண் டிருந்ததில்லை. அதாவது அரசியல் வழிப்பட்ட ஒரு திட்டம் மட்டுமே இதைக் கோட்பாட்டின் அடிப்படையில் தெளிவாக வரையறுக்கும். அது ஒரு புரட்சிகர வழியிலோ அல்லது வெறும் சித்தாந்த (இரத்தம் சிந்தா அரசியற் போர்) வழியிலோ இவை அமையலாம். ஆனால் திட்டமில்லாத எந்தக் கோரிக்கையும், அதைக் கடைப்பிடிக்கக் கோரி உடைந்து-சிதைந்து நின்றுபோவதற்குக் காரணங்களாகக் கற்பிற் பதும் , சந்தேகத்திற்கு இடமில்லாத வெறும் தூய்மை வாதங்களேயாகும்.

ஈழப் போராட்டமானது பல சந்தர்ப்பங்களில் தூய்மை வாதங்களுக்குள் முடங்கி, சிக்கிச் சிதறி, படுகொலைகளால் உடைந்து நொருங்கிப் போனது எமது கடந்த வரலாறாகும். இதை மனிதம் கற்றுக்கொள்ள மறுக்கும் \ மறுத்தது என்பது கடந்த இயக்க வரலாறுகளின் தொடர்ச்சியே ஆகும். சமருடன் மனிதமானது மிகக் கடுமையாக முரண்பட்டு விவாதித்த நிலைமைகளிலும், 'சமர்'ானது மனி தத்தின் தொடர்ச்சியை அங்கீகரித்து நின்றது. எமது விவாதத்திற்கு நேரடியாக பதிலளிக்கத் தவறி புதிய புதிய பிரச்சனைகளில் தாவிச் சென்று எம்மை மூடர்கள் என அறிவித்த நிலையில் எம்மால் மேல்கொண்டு விவாதிக்க முடியவில்லை.நாம் ஒரு திட்டத்தைக் கோரினோம். உங்கள் அரசியல் வழி என்ன? எனக் கேட்டோம். ஆனால் அவைகளுக் கென்று அவர்கள் பதிலளித் ததில்லை. மாறாக மார்க்சிச திரிபுகளை உச்சரித்தபடி சிரழிவுவாதங்களை வளர்க்கவும், வக்காளத்து வாங்கவும், மறுதரப்புக்கு இருட் டடிப்புச் செய்தனர். (இவ்வாறே சமரின் கட்டுரை ஒன்றிற்கும், கனடா வசகர் கடிதம் ஒன்றிற்கும் நிகழ்தது) மனிதத்தின் அமைப்பு வடிவமானது முன்னைய P.L.O.T.E யை ஒத்ததாக உள்ள தென நாம் விவாதித்தபோது தம்மை P.L.O.T.E என முத்திரை குத்தவதாகக் கூறி பிரச்ச னையை திசை திருப்பினர். நாம்; P.L.O.T.E இல் இருந்த பல வேறு கதம்பக் கூட்டம்போல் மனிதம் உள்ளது என சுட்டிக்காட்டியது இன்று மனிதத்தின் சிதைவினூடாக நிருபனமாகி யுள்ளது. மனிதத்தின் நிலையானது விரக் தியையும், ஏமாற்றத்தையும் விதைக்குமென எமது முன்னய விமர்சனங்கள் கூறியபோது, பிரச்சனையை திசைதிருப்பி சமருக்குள் அப்படியுள்ளது எனக் கூறி தமது நிலையைத் தக்கவைக்க முனைந்தனர். இதற்கு மாறாக மனிதத்தில் இருந்தோர், மற்றும் அவர்களின் வாசகர்களே விரக்திக்குள்ளா கியதுடன், ஒரு நம்பிக்கையீனத்தின் பொதுப் போக்கை வளர்த் தனர். இதை சமர் வாசகருக்கு ஒருவர் எழுதிய கடிதத்தின் மூலம் இனம்காட்ட முயல்கின்றோம்.

சுவீஸ்
28.12.94

*" நான் கடிதம் எழுதுவதற்கு முற்போக்குக் குழுக்கள் என தம்மைத் தாமே கூறிக் கொள்ளும் குழுக்கள் மீது ஏற்பட்ட விரக்தியே காரணம். இங்கு என் கண்முன்னால் மனிதம் குழுவின் உடைவு,தனிநபர்கள் அல்லது குழுவாய்.. இதனால் இன்று மனிதம் இதழ் வெளியிடுவதில்லை. வாசகர் வட்டம் கலைக்கப்பட்டு விட்டது. இவைகளைப் பார்க்கும் போது நாம் வெறும் வாய்வீரர்கள் தான் என்பதை கடந்த காலத்திலிருந்து என்னால் புரியக் கூடியதாகவிருந்தது. ஆகவே நான்------ உடன் கூட அரசியல் ரீதியாகக் கதைப்பதில்லை. ------ அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்க முடியாது. ஆனால் இந்தப் புத்திஜீவிகள் மீதுதான் வெறுப்பு. அதிருப்தி - வேறு ஒன்றுமில்லை......*

-லோகன்-

இதைவிடவும் மனிதத்தைச் சார்ந்த எமது முன்னைய நண்பர்கள் ஒருசிலர் கூட, மனிதத்துடனான எமது விவாதத்தின் பின்னர் தொடர்பை நிறுத்திக் கொண்டனர். இதில் வேடிக்கை என்னவென்றால் எம்மண்ணில் பல அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராக, நாம் கொல்லப்பட்டு விடுவோம் என்ற ஒரு நிலையில் கூட பரஸ்பர புரிந்துணர்வுடன் தோளோடு தோள் நின்றவர்கள், மனிதம் என்ற அந்தக் கொள்கைத் திட்டம் இல்லாத அமைப்பை மட்டும் ஆதாரமாகக் கொண்டு உறவை ⮌




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறுத்திக் கொண்டது அவர்களின் அரசியலின் பரிமானத்தைப் புரிய வைத்தது.

இதைவிடவும் இன்னொரு வேடிக்கை என்னவென்றால்: அ.மார்க்ஸ் வந்துபோன சில மாதத்துக்குள் மனிதம் நின்றுபோ னது தான்! கடந்தகால லெனினிய கட்சி முறைகள் தவறானது எனப் பறைசாற்றி, மனிதம் போன்ற வடி வங்கள் சரியானது என தனது அங்கீகாரத்தை செய்துவந்த அ.மார்க்ஸ் போன்றவர்களின் அமைப்பு வடிவமானது எவ்வளவு பலவீனமானது என்பதனை- மனிதத்தின் சிதைவு கோடிட்டுக் காட்டி நிற்கின்றது. மனிதத்தில் எழுதிய மார்க்சிய திரிபு மற்றும் சீரழிவுவாதிகளால் ஏன் தங்களின் வழிகளில் இவ்வமைப்பை தொடர்ந்தும் பாதுகாக்க முடிய வில்லை? ஏன் அ.மாக்ஸ் ஆலும் முடியாமல் போனது? ஆண் மீகம், அழகியல்...... போன்ற காரணங்களே மனிதத்தின் சிதைவின் அடிப்படையில் பிரதிபலிக்கின்றது. (உங்களின் கூற் றுப்படி)



மனிதம் இதழ்-30 மூலம் - மனிதம் நிறுத்துவதை அறிவித்தவர்கள் அதில் மிகப் பெரியளவில் அ.மார்க்ஸ் பேட்டியொன்றைப் பிரசுரித்து மீண்டும் மார்க்சிசத் திரிபுகளுக்கு பெரியளவில் வக்காளத்து வாங்கியுள்ளனர். மனிதம் உடைவின்பின் மறைந்திருக்கும் காரணங்கள் அரசி யல் ரீதியானதே. இதற்கு வர்க்க அரசியல் உண்டு. இதை மறைக்க அல்லது திசைதிருப்ப தனது அணிகளுக்கு "சொல்லுக்கும் - செயலுக்கும், எழுத்துக்கும் - நடத்தைக்கும், இடையில் விரிசல்;" எனக் கூறி மனிதத்தின் சிதைவை திசைதிருப்பியும் உள்ளனர்.

மனிதம் மீண்டும் வரவேண்டும். எல்லாவற்றையும் உண்மையான பக்கத்தில் ஆராயும் போது உண்மைகள் பளிச்செனவெட்டவெளிச்சமாகத் தெரியவரும். அதுமட்டுமே தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக அமையும். உண்மைகளை ஆராய திசைதிரும்பாது மனிதம் வாசகர் வட்டம் முயலவேண்டும் என்பதே சமரின் விருப்பாகும்..

## இந்தியாவில் புதிய ஊழல்களும், லஞ்சங்களும் அம்பலமாகியுள்ளது

பலகோடி பெறுமதியான ஊழல்களும், லஞ்சங்களும் அம்பலப்பட்டுப் போனதால் இந்திய ஜனநாயகம் நாற்றமெடுக்கின்றது. காஸ்மீரில் போராடும் பாக்கிஸ்தான் சார்பு ஹிஸ்புல் முஜாகிதீன் என்ற அமைப்புக்கு வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொடுத்த இருவரை சி.பி.ஐ கைதுசெய்தது. இதைத் தொடர்ந்து மேலும் இருவரை சி.பி.ஐ கைது செய்து 'தடாவின்' கீழ் சிறையில் தள்ளியது.

இந்த வழக்கு விசாரனையில் இன்னுமொரு பணக் கடத்தல்காரன் (சுரெந்திரா ஜெயினின்) பெயர் வெளிவரவே அவன் இருப்பிடத்தை சி.பி.ஐ சோதனை செய்தது. அங்கு பொருந்தொகை பணமும், அன்னியச் செலவானி சில லட்சங்களும், பங்குப் பத்திரங்களும், 4500 கிலோ தங்கமும் (இதன் பெறுமதி- இலங். ரூபா 338 கோடி ரூபாய்) கைப்பற்றப்பட்டது.

இதைவிடவும் முக்கியமான ஒரு டயரியையும் கைப்பற்றினர். இந்த டயரி மேலும் பல தகவல்களை வழங்கியுள்ளது. இவன் லஞ்சம் கொடுத்த ஒரு தரகனாக அரசுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் இருந்தது தெரிய வந்துள்ளது. இவ் டயரியில் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது என்ற விபரமும், எதிர் கட்சி முதல் ஆளும்கட்சி ஈறாகவும், சி.பி.ஐ முதல்கொண்டு அனைத்து அதிகாரிகளும் கோடிகோடியாக லஞ்சம் பெற்றுள்ளதை இவ் டயரி வெளிப்படுத்தியுள்ளது.

- இவ் விபரங்கள் வெளிவந்துவிட்டால் தமது குட்டுக்கள் வெளிவந்துவிடும் எனக்கண்ட எல்லாக் கட்சிகளும் இதை மூடிமறைக்க முற்பட்டதன் மூலம் இக்குற்றவாளியை விடுதலை செய்ததுடன், இதுபற்றி யாரும் கதைக்காது மௌனமாகவுள்ளனர். அவர்களால் கதைக்க முடியாது. அவர்களின் கதைகளையும் இவ்டயரி கொண்டுள்ளது. இதைவிட அரசு பொதுத்துறைகளை தனியாருக்காக, முதல் சுற்று விற்பனையில் 8000 கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதென கட்டுப்பாடு மற்றும் தணிக்கைப் பொதுமோலானர் அறிக்கையே அம்பலமாக்கியுள்ளது.
- சக்கரை (சீனி) இறக்குமதியில் 5000 கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றுள்ளது.
- ரயில்வே மந்திரி ஜாபர் செரிப் 2000 கோடி ரூபாய் போலெரி கம்பனியிடமிருந்து ரயில் எஞ்சின்களை வாங்கியதில் ஊழல் நடந்துள்ளது.
- தொலை தொடர்புத்துறை மந்திரி சுக்ராம் தனது உறவுக்காரர்களுக்கு மட்டும் 500 கோடி ரூபாய்க்கு 'கொன்றாக்ட்' ஒதுக்கி ஊழல் செய்துள்ளார்.

இந்திய ஜனநாயகம் என்பது கொள்ளையடிப்பதற்கே. வறுமையில் மக்கள் அடுத்தநேர உணவுக்கே வழியின்றி கந்தலுடன் பவனிவருகின்றனர். கொள்ளையடித்தோர் மாடமாளிகைகளில் 5-6 கார்களில் பவனி வருகின்றனர். இதுதான் ஏகாதிபத்தியம் விரும்பும் இந்திய ஜனநாயகமும் கூட..

### போலி ஜனநாயகவாதி ஜெல்சின் பற்றி போலிக் கம்யூனிஸ்ட்டு 'கோபி'

சோவியத் யூனியனின் கடைசி அதிபர் கொப்பசேவ் தற்போதைய ஜனாதிபதி ஜெல்சினைப் பற்றிக் கூறும்போது தனது பதவிக் காலத்தில் "ஜெல்சினை பாலைவன ஆராச்சி பற்றி படிக்க அனுப்பியிருக்க வேண்டும், அதனைச் செய்யாதது தான் செய்த பிழை" எனக் கூறியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டென்மார்க் மாநாட்டில் வெளிவந்த உண்மைகள்

டென்மார்க் தலைநகர் ஹோபன் ஹாகனில் மார்ச் 6 முதல் 12 வரை நடந்த சர்வதேச மகாநாட்டில் மூன்று முக்கிய கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. வறுமை, வேலையின்மை, சமுதாயச் சிதைவு என்பவைகளை ஐ.நாட்டு சபை இன்றைய காலத்தின் மையப்பிரச்சனை எனக் கூறி விவாதித்தன. இவ் விவாத நடவடிக்கையில் அதில் கலந்து கொண்ட சில பெண் பிரதிநிதிகள் வறுமைபற்றி அர்த்தமற்ற போலித்தனத்தைக் கண்டித்து போராடினர். இந்நிலையில் ஐ.நா சபை தயாரித்த அறிக்கையின் சிலபகுதிகளை புதிய ஜனநாயகம் இதழ் வெளியிட்டது. அதிலிருந்து சிலபகுதிகளைத் தருகின்றோம்.

(சமர் ஆர்.கு)

## வறுமை – இன்றைய நிலையில்

1994ம் ஆண்டின் இறுதியில் பூமியில் மொத்தமாக 560 கோடி பேர் வாழ்ந்தனர். இதில் 100 கோடி பேருக்கு மேல் மிகமோசமான வறுமையில் வாழ்கின்றனர்.

இவ் 100 கோடி பேர் வருட வருமானமாக 370 டாலர்களை மட்டும் கொண்டு (ஏறத்தாழ 18,500 இலங்கை ரூபா) உயிர் வாழ போராடிக் கொண்டிருக்கின்றனர்.

சுமார் 55 கோடி பேர் ஒவ்வொரு இரவும் 'இராப்பட்டினி'யில் கிடக்கின்றனர். 150 கோடி பேர் சுத்தமான நீர், கழிவு வசதிகளின்றி தவிக்கின்றனர். இவர்களின் சராசரி வாழும் வயது பல்வேறு காரணிகளை உள்ளடக்கி 50 ஆக உள்ள அதேநேரம் ஜப்பானின் சராசரி வயது 80ஆக உள்ளது.

முதியோர்கள் மட்டும் 100 கோடி பேர் கல்வி அறிவு அற்ற தற்குறிகளாக வாழும் அதேநேரம் 50 கோடி சிறுவர் சிறுமியர் எங்கேயும் பள்ளி செல்லா துள்ளனர். வறுமையில் சிக்கியுள்ளோரில் 70 வீதமானோர் பெண்களாகவும் அடுத்து நெருக்கமாக உள்ளவர்கள் முதியோர் களும் ஆவர்.

ஆபிரிக்காவில் உயிர் வாழும் 1000 பேருக்கு 175- பேர் குழந்தை இறப்பாக நிகழ்கின்றது. இது இந்தியாவில் 100 பேராகவும், கிழக்கிலும் - மேற்கிலு முள்ள முன்னேறிய நாடுகளில் 15 பேராகவும் உள்ளது.

- **ஏழைகள் உள்ள இடம் எங்கே?**

ஆசிய, ஆபிரிக்க நாடுகளே ஏழைகளின் இடமாகவுள்ளது. உலகமக்கள் தொகை யில் 16 சத விகிதத்தினர் ஆபிரிக்காவில் வாழுகின்ற போதும் அதில் அரை வாசிப்பேருக்கு மேல் உலகின் பரம ஏழைகளாக உள்ளனர்.

நகர்புறத்தைவிட கிராமப்புறத்தில் ஏழைகள் கூடுதலாக உள்ள அதேநேரம் இது 80 சத விகிதமாகக் காணப் படுகின்றது.

ஆசியாவில் 31சத விகித கிராமமக்கள் சகாராவை ஒட்டியும், ஆபிரிக்காவில் மொத்த மக்கள் தொகையில் 80சத விகிதத்தினரும், தென் அமெரிக்காவில் 61சத விகிதத்தினரும் ஏழைகளாக உள்ளனர். முன்னேறிய நாடுகளில் வறுமை 15சத விகிதமாகவே உள்ளன.

- **வறுமையின் தொடர்ச்சியான போக்கு**

இப்போதைய வறுமை நிலை தொடரின் 2000ம் ஆண்டில் மேலும் 20 கோடி பேர் வறுமைக்குள் நகர்வர் என உலகவங்கி மதிப்பிட்டுள்ளது.

- **வேலையின்மை**

1994ல் உலக சனத்தொகை 560 கோடியாக உள்ளபோது அதில் உழைப்பு சக்திகள் 280 கோடி பேராக இருந்தனர். இதில் 12 கோடி பேர் லேயின்றி உள்ள னரென அறிக்கைகள் கூறுகின்றன.

அதிகரித்து வரும் இடைவெளி என்பது தொழில்மயமான நாடுகளில் ஓராண்டுக்கு 20,000 டாலராக (ஏறத்தாழ 10,00,000 இலங்கை ரூபாய்கள்) உள்ள அதேநேரம் கீழ்நிலை நாடுகளில் 500 டாலராக (ஏறத்தாழ 25,000 இலங்கை ரூபாய்கள்) உள்ளது. இது கிட்டத்தட்ட 40மடங்கு அதிகமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருவாயை பெறுபவர்களில் 20சத விகித உயர் மட்டத்தினர் உலக வருவாயில் 83சத விகிதத்தை பெறும் அதேநேரம் கீழ்நிலையிலுள்ள 20சத விகிதத்தினர் உலக வருமானத்தில் வெறும் 1.5சத விகிதத்தையே பெற்று வருகின்றனர்.

உழைக்கும் சக்திகளில் 30சத விகிதத்தினர் அதாவது 80 கோடி பேர் உற்பத்தி பூர்வமான வேலைகளில் இல்லை. மாறாக வேலை தேடிக்கொண்டோ குறைந்த வேலைகளிலோ உள்ளனர்.

குறைந்தவேலையில் 70 கோடி பேர் உள்ள அதேநேரம் இவர்களைச் சார்ந்தே 110 கோடி பேர் பரம ஏழைகளாகவுள்ளனர். 24 பெரிய தொழில்மயமான நாடுகளில் 10பேருக்கு ஒருவர் வேலையின்றியுள்ளனர்.

- <u>வளரும் நாடுகள்</u>

வளரும் நாடுகளில் மொத்த மக்கள் தொகையில் 60சத விகிதத்தினர் கிராமப்புறத்தில் உள்ள அதேநேரம் விவசாயத்தைச் சார்ந்துமுள்ளனர். இவர் களின் மொத்த உற்பத்தி தேசிய உற்பத்தியில் 40சத விகிதத்தைப் பெற்றுக் கொடுக்கின்றது.

- <u>விளிம்புநிலைத் தொழிலாளர்கள்</u>

சுமார் 30 கோடி பேரைக் கொண்ட இந்தப் பிரிவு பெரும்பாலும் வளரும் நாடுகளில் பெண்களைக் கொண்டதே. வாய்ப்புக்கள் பற்றாக் குறையுடன் எந்த விதமான பாதுகாப்புகளு மின்றி முறை சாராத துறையில் மிக மோசமாக கசக்கிப் பிழியப்படுகின்றனர்.

- <u>சர்வதேச குடிபெயர்தல்</u>

மொத்த உழைப்பு சக்தியில் 1.3சத விகிதத்தினர் அதாவது 3,35 கோடி பேர் பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள குடி பெயர்பவர்களாக உள்ளனர்.

- <u>கடன் நெருக்கடி</u>

வளரும் நாடுகளின் கடன்தொகை கடந்த பத்து வருடங்களில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. 1992ல் 23.5 லட்சம் இலங்கை ரூபாய்களாக மாறிய பின்னர் வளர்ச்சி உறைந்துபோய் வேலையின்மை அதிகரித்துச் செல்கின்றது.

- <u>தொழில் மயமான நாடுகள்</u>

1994ல் வேலையின்மை 8.6சத விகிதமக அதிகரித்தபோதிலும் இது மேற்கு ஐரோப்பாவில் 12சத விகிதமாவும், கிழக்கு ஐரோப்பாவில் 15சத விகிதமாவும் இருந்தது.

- <u>ஆபிரிக்கா</u>

இரண்டு பத்தாண்டுகளில் பொருளாதார நெருக்கடியில் சகாராவை ஒட்டிய பகுதிகள் மிக மோசமான வறுமைக் குள்ளாகி உள்ளன. இங்கு நகர்ப்புற வேலையின்மை 20சத விகிதமாகவும், 60சத விகிதமானோர் முறைசாராத அரைகுறை வேலைகளில் நகர்ப்புறங்களில் காணப்படுகின்றனர். கிராமப்புறங்களில் குறைவேலைகளில் 50சத விகிதத்திற்கு மேலானோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

- <u>வட ஆபிரிக்கா – மத்திய ஆசியா</u>

இங்கு வேலையின்மை 10சத விகிதம் முதல் 20சத விகிதம் வரை மாறு படுகின்றது. இளைஞர்களே இங்கு மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

- <u>தென் அமெரிக்கா</u>

இறுக்கமான கட்டுமான சீர்செய் இயக்கம் இருந்தும் 1980ல் இருந்ததுபோல் மீண்டும் 7சத விகித வேலையின்மையை அடைந் துள்ளது.

- <u>கிழக்கு, தென்கிழக்கு ஆசியா</u>

உலகிலுள்ள 110 கோடி ஏழைமக்களில் 50சத விகிதத்தினர் தெற்கு ஆசியாவில் வாழ்கின்றனர். இதைவிட மேலும் 15சத விகிதத்தினர் கிழக்கு ஆசியாவில் வாழ் கின்றனர்.

- <u>சமூக ஒழுங்கேற்றம் சமூக முன்னேற்ற அறிகுறி</u>

☆ வளரும் நாடுகளில் வாழும் வயது சராசரியாக 1950களில் 40 ஆண்டுகளாக இருந்தது. இது 1990ல் 63 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது.

☆ ஆபிரிக்கா தவிர்ந்த எல்லாப் பிராந்தியத்திலும் கருத்தரிக்கும் விகிதம் குறைந்துள்ளது.

☆ சில நாடுகளில் மக்கள் தொகை அதிகரிப்பும், குழந்தைகள் சாவு உயர்வும் இருந்தபோதிலும், மொத்த உலக ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளவில் குழந்தைகள் இறப்பு எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

☆ 1960 முதல் 1990 வரை உலகில் கல்விக்கு ஒதுக்கப்படுவது நிகர தேசிய உற்பத்தியில் 2.2ல் இருந்து 3.4சத விகிதமாக உயர்ந்துள்ளது. 1970க்கும் 1990க்கும் இடையில் பெண்கள் கல்வி அறிவைப் பெறுவதில் முன்னேற்றம் கண்டுள்ளது. இது 18சத விகிதத்தில் இருந்து 36சத விகிதமாக அதிகரித்துள்ளது.

☆ பொருளாதார ரீதியில் வளரும் நாடுகளில் சராசரி நிகர வருமானம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இரண்டு மடங்குகளாக அதிகரித்துள்ளது. 1990ல் இருந்த பொருளாதார பின்னடைவிலிருந்து 1993ல் ஒருசத விகிதமாகவும், 1994ல் 2.2சத விகிதமாகவும், 1995ல் 3சத விகிதமாகவும் வளர்ச்சி கண்டுள்ளது.

☆ 1987ல் இருந்து உலக இராணுவச் செலவு ஆண்டுக்கு 3.6சத விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளது. இதன் விளைவாக கணக்குப் புத்தகத்தின் படி 'சமாதானத்தால் அடையும் வருமான'க் கூட்டுத் தொகை 1987க்கும் 1994க்கும் இடையில் 49,17,457 கோடி இலங்கை ரூபாய் கிடைத்துள்ளது.

- சமூக சிதைவின் அறிகுறிகள்

☆ உலகின் மக்கட் தொகையில் 10சத விகிதத்தினருக்கு குறைவானோரே மக்களின் வாழ்க்கையை வடிவமைக்க அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு நிறுவனங்களில் பங்கேற்கின்றனர். ஏழைகள், பெண்கள், முதியோர், சிறுபான்மையினர், கிராமப்புறக் குடிகள் ஆகியோர் பெரும்பாலும் இவற்றிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளனர்.

☆ அரசியல் அதிகாரம் குறிப்பாக வளரும் உலகில் மையப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு உள் ஊர் அரசாங்க அமைப்புக்கள் சராசரி 10சத விகிதமே செலவு செய்ய முன்னேறிய நாடுகள் அனுமதிக்கின்றன.

☆ அமெரிக்காவில் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொரு முதியோருடைய நலனுக்கும் ஒதுக்கப்படும் செலவு 1989க்கும் 1990க்கும் இடையில் 40சத விகிதம் குறைந்துள்ளது. இதைவிட வெள்ளை இனத்தவர்களை விட கறுப்பினத்தவரின் வேலையின்மை இரண்டு மடங்காகும்.

- பாரபட்சம்

☆ உலக எழுத்தறிவில்லாதோரில் 66சத விகிதமும், உலகின் ஏழைகளில் 70சத விகிதம் பெண்கள் ஆவர். ஆசியாவில் மட்டும் ஏழைப் பெண்களின் தொகை 37.4 கோடி பேர் ஆவர். இது மேற்கு ஐரோப்பாவின் மக்கள் தொகையைவிட அதிகமாகும்.

☆ உலக மக்கள் தொகையிலிருந்து ஆண்டுக்கு ஒருலட்சம் பெண்கள் காணாமல் போகின்றனர். இதில் அதிகமானோர் தெற்கு, கிழக்கு ஆசியாவினர். இங்கு பெண்கள் கருவில் வைத்தே அழிக்கப்படுகின்றனர்.

☆ அமெரிக்கா அல்லாத உலகின் ஒருசத விகிதமே நிர்வாக உயர்நிலையில் பெண்கள் உள்ளனர். இன்றைய நிலையிலுள்ள ஆண்களக்குச் சமமாகப் பெண்கள் - முதிய நிர்வாகிகள் ஆக உயர்வதற்கு 475 வருடங்கள் பிடிக்குமென ஆய்வுகள் கூறுகின்றன.

☆ 70 நாடுகளில் வாழும் 30 கோடி பூர்வ குடிமக்கள் கடுமையான பாரபட்சத்தையும், வன்முறையையும் அடிக்கடி சந்திக்கின்றார்கள். கனடாவின் இன்றைய கனேடியர்கள் போல் 6 மடங்கு பூர்வகுடி மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். வெனிசுலாவில் எஞ்சியிருக்கும் பத்தாயிரம் 'யானோமாமி'களை அழிந்துபோகும் அளவிற்கு அவர்கள் பலவழிகளிலும் சுரண்டப்படுகின்றனர்.

☆ 1993-94 கணக்குப்படி தென் ஆபிக்காவில் வாழும் வெள்ளையர்கள் - கறுப்பர்களுக்கு இடையிலுள்ள வேறுபாடு அமெரிக்காவை விட 4 மடங்கு அதிகமாகும். இது இனவேற்றுமை, நபர்வாரி வருமானம், மனிதவள மேம்பாட்டு நடவடிக்கை என்பனவற்றில் காணப்படுகின்றது.

- வன்முறையும் முறைகேடும்

☆ அமெரிக்காவில் (1,00,000க்கு 12 பேர்வீதம்) கொலைகள், (1993ல் 1,50,000) அறிவிக்கப்பட்ட கற்பழிப்புகள், (1992ல் 7000) துப்பாக்கிச் சூடுகள், சிறார் சாவுகள் என்று உயர்ந்த அளவு வன்முறைச் சம்பவங்கள் உலகக்கு தலைமை தாங்குகின்றது. 30 லட்சம் அமெரிக்கக் குழந்தைகள் முறைகேடுகள், புறக்கணிப்புகளுக்குத் தீராப் பலியாகியுள்ளனர்.

☆ சிறார்கள் தான் வன்முறைக்குப் பலியாகும் ஆபத்திலுள்ளனர். இரண்டு லட்சம் சிறார்கள் வாழும் பிரேசிலில் ஒவ்வொரு நாளும் 4 பேர் கொல்லப்படுகின்றனர். 1993-94 ஆகிய ஓராண்டில் மட்டும் பிரேசியச் சிறுவர் கொல்லப்படுவது 40சத வகிதம் அதிகரித்துள்ளது.

☆ தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை ஆகிய நாடுகளில் பாலியல் சுற்றுலா மையங்களில் மொத்தம் 5 லட்சம் சிறுமிகள் விபச்சாரத்தில் வேலை செய் கின்றனர்.

☆ பெண்களுக்கு எதிரான வன்முறை எங்கும் நிரம்பியிருக்கின்றது. ஆனால் பெரும்பாலும் செய்தியாக வெளிவரு வதில்லை. எடுத்துக்காட்டாக இந்தியாவில் ஆண்டொன்றிற்கு 5000 முதல் 9000 வரையிலான வரதட்சினைக் கொலை கள் நடக்கின்றன. வளரும் நாடுகளிலுள்ள மனைவியர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கணவன்மார்களால் துன்புறுத் தித் தாக்கப்படுகின்றனர். இதேநேரம் உலகம் முழக்க 2000 பெண்களக்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றாள்.

- <u>கிரிமினல் குற்றம்</u>

☆ சட்டவிரோத நடவடிக்கைகள் பெருகி வருகின்றன. அமெரிக்காவில் மட்டும் 1992ல் 140 லட்சம் கிரிமினல் குற்றங்கள் நடந்துள்ளது. இதனால் ஏற்பட்ட இழப் பானது 21,39,261 கோடி இலங்கை ரூபாய்களாகும். இது 80 வளரும் நாடுகளின் கூட்டுவருமானத்தை (அந்நாடு கள் அனைத்தினதும் நிகர உற்பத்தியின் கூட்டுத் தொகையை) விட அதிகமான தாகும். இது வளரும் நாடுகளின் மொத்தக் கடன்தொகையை விட கொஞ்சமே குறை வானதாகும்.

☆ உலகம் முழுவதும் பார்த்தால் பல கிரிமினல் குற்றங்கள் போதை மருந்துடன் தொடர்புடையதாக வுள்ளது. கனடாவில் 1,00,000க்கு 225 பேரும், ஆஸ்திரே லியாவில் 1,00,000க்கு 400 பேரும் போதைமருந்து குற்றங்களில் சிக்கி யுள்ளனர். இது டென்மார்க், நோர்வேயில் இரண்டுமடங்காகி உள்ளன. இது ஜப்பா னில் 1985-90க்கு இடையில் 30 மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது.

☆ தேசிய எல்லைகளைக் கடந்து செய்யப்படும் தேசம்கடந்த கிரிமினல் குற்ற அமைப்புக்களின் ஆண்டு வரவு செலவு மட்டும் 50 லட்சம் கோடி இலங்கை ரூபாய் களாகவுள்ளது. இது உலகில் வளரும் நாடுகளின் மொத்த கடன் தொகையை விட 2 மடங்கு அதிகமாகும்.

- <u>குடிபெயருதல்</u>

☆ பூமியில் வாழும் 115 பேருக்கு ஒருவர் வீதம் குடிபெயர்ந்துள்ளனர். இது அகதியாகவோ, பொருளாதார, அரசியல் அல்லது இராணுவ காரணத்தாலோ தமது வீட்டைவிட்டு ஓடவைத்துள்ளது.

☆ கடந்த மூன்று பத்த ஆண்டுகளில் அர்ஜென்டீனா மக்கள் தொகைக்கு கிட் டத்தட்ட சம அளவான 350 லட்சம் பேர் தெற்கிலிருந்து வடக்குக்கு குடிபெயர்ந் துள்ளனர். ஒவ்வொர் ஆண்டும் மேலும் 10 லட்சம் பேர் குடிபெயர்ந்து வருகின்றனர்.

☆ அரசியல் அகதிகளாகவும், தேசிய இனமோதல்களுக்குப் பலியானவர்களாகவும் எல்லை கடந்து ஓடுபவர்கள் எண்ணிக்கை 1970களில் 80 லட்சமாக இருந்து இப்போது 2 கோடியாகிவிட்டது. மேலும் 260 லட்சம் பேர் உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந் துள்ளனர்.

- <u>மோதல்</u>

☆ உலக நாடுகளில் 40சத விகிதமானவை குறைந்தது 5 தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளாகும். மொத்த நாடுகளில் பாதி அளவுக்காவது தேசிய இனங்களக்கு இடையில் ஏதாவது வடிவிலான மோதலைச் சந்தித்து வரு கின்றது.

☆ 1990ல் நிகழ்ந்த 82 மோதல்களில் 79 தேசிய எல்லைக்குள் நிகழ்ந்தன.

☆ 1994ல் ஏப்பிரல் - ஜுலை ஆகிய நான்கு மாதங்களில் ருவாண்டா நாட்டு மக்கள் 35 லட்சம் பேர் கொல்லப்பட்டனர் அல்லது வீடுகளை விட்டுத் துரத்தப் பட்டனர்.

☆ இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் யுத்தத்தின் காரணமாக கொல்லப் பட்டோரில் 90சத விகிதம் இராணுவத் தினரே. இப்பொழுது 90சத விகிதம் சாதாரண மக்கள் ஆவர்.

☆ கடந்த பத்தாண்டுப் போர்களில் 15 லட்சம் குழந்தைகளுக்கு மேல் கொல் லப்பட்டுள்ளனர். 50 லட்சம் குழந்தைகள் அகதிகள் முகாம்களில் வாழுகின்றனர். 120 லட்சம் குழந்தைகள் வீடுவாசல், குடும்பம் அல்லது இரண்டையும் இழந் துள்ளனர்.

☆ பரம ஏழைகளான 200கோடி பேர் சம்பாதிக்கும் மொத்த வருவாய்களின் அள விற்கு வளர்ந்த நாடுகள் தமது இராணுவ அதிகாரிகளுக்காக செலவு செய்கின்றன.

☆ இராணுவத் திட்டங்களுக்காக ஆண்டுக்கு 4,04,000 கோடி இலங்கை ரூபாயை அதாவது உலக மக்களின் பாதிப் பேருடைய வருமானத்திற்குச் சமமாக செலவு செய்கின்றது. உலகில் 100கோடி பேர் அடிப்படை சுகாதார வசதியின்றி உள்ளனர். வயதுவந்தோர் நாலு பேரில் ஒருவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. உலகின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் தினமும் பட்டினியாகக் கிடக்கின்றனர், இந்த உலகத்தில்..●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்சல்வடோர் நாட்டில் SCHOOL OF THE AMERICA என்ற அமைப்பால் பயிற்றப்பட்ட ராணுவத்தினரால் நடாத்தப்பட்ட குற்றங்கள்

-தங்கரூபன்-

**கொலை 1**
**ROMERO கொலை**
**1980.3.24**

பிரதம பிசப் OSCAR ROMERO, வறிய மக்களின் பேச்சாளர் எல்சல்வடோரின் தலைநகரான சான் சல்வடோரில் பூசையின் போது கொலை செய்யப்பட்டார். 3 அதிகாரிகள் இக் கொலைக்காகக் குற்றம் சாட்டப்பட்டனர். அதில் இருவர் SOA யினரால் பயிற்றப்பட்டுள்ளனர்.

**கொலை 2**
**கன்னியாஸ்திரி கொலை**
**1980.12.02**

3 அமெரிக்க கன்னியாஸ்திரிகளும், அவர்களின் உதவியாளர் ஒருவரும் சான்சல்வடோரருக்கு சமீபத்தில் அவர்களின் காரிலிருந்து வெளியேற்றப்பட்டு கற்பழிக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும் உள்ளனர். இதைச் செய்தவர்கள் சல்வடோர் தேசியபடையைச் சேர்ந்த ராணுவத்தினர். 5 அதிகாரிகள் இவற்றுக்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இவர்களில் 3 நபர்கள் SOA வில் பயிற்றப்பட்டவர்கள்.

**கொலை 3**
**SHERATION விடுதிக் கொலை**
**1981.01.03**

மூன்று தொழிற்சங்கத் தலைவர்கள் HOTEL SHERATION ல் சல்வடோர் தேசியபடையினரால் மரணதண்டனைக்குள்ளாக் கப்பட்டனர். 3 அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அதில் இருவர் SOA வில் பயிற்றப்பட்டவர்கள்.

**கொலை 4**
**EL JUNZUILLO கொலைகள்**
**1981.03.12**

சல்வடோர் ராணுவத்தினர் EL JUNZUILLO என்ற இடத்தில் நடாத்தியகொலை இதுவாகும். பெண்கள், குழந்தைகள் கொலை செய்யப்படும் முன் கற்பழிக்கப்பட்டனர். 3 அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இருவர் SOAயில் பயிற்றப்பட்டவர்.

**கொலை 5**
**EL MOZOTE படுகொலைகள். 1981.12.–.**

நூற்றுக்கணக்கான நிராயுதபாணியான மக்கள் EL MOZOTE விலுள்ள MORAZO மாகாணத்தில் கொலை செய்யப்பட்டனர். அரைகுறையாக எரிக்கப்பட்ட உடல்கள், சித்திரவதை செய்யப்பட்ட உடல்கள் அழுகி கிடக்கவிடப்பட்டது. 12 அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டனர். அதில் 10 பேர் SOA யில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள்

**கொலை 6**
**LAS HOJAS படுகொலைகள் 1983.02.22**

16 அப்பாவி மக்கள் JAGUR எனும் படைப்பிரிவினரால் கொலை செய்யப்பட்டனர். உடல்கள் எரிக்கப்பட்டன. 6 அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டனர். 3 பேர்கள் SOA யில் பயிற்றப்பட்டவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கொலை 7**
**SAN SEBASTIA படுகொலைகள்**
**1988.09.21**

GBOA எனும் குழுவால் 10 SANSEBASTION பகுதி மக்கள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். 7 அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டனர். அதில் 6 அதிகாரிகள் SOA யில் பயிற்றப்பட்டவர்கள்.

**கொலை 8**
**பாதிரி படுகொலை 1989.11.16**

பாதிரியாருடன் அவரின் உதிவியாளர், அவரது மகன் ஆகியோர் SANSALVADOR UNIVERSITY யில் படுகொலை செய்யப்பட்டனர். 27 அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டனர். 19 பேர்கள் SOAயில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள,;.

## " SCHOOL OF THE AMERICAS" வின் வரலாற்றுப் பின்னணி

அமெரிக்காவின் ராணுவ அக்கடமியான SCHOOL OF THE AMERICAS 1946ம் ஆண்டு பனாமாவில் லத்தின் அமெரிக்க நாடுகளில் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. 1960களில் சர்வாதிகாரிகள், கொடுங்கோலர்கள், கூலி இராணுவத்தினரை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியது. இதனாலே இதனை ""இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு கல்லூரி"" என லத்தீன் அமெரிக்க இராணுவத்தினர் அழைத்தனர்.

1984ல் கல்லூரி அமெரிக்காவின் மாநிலமான GEORGIAவின் FORT BENNING நகருக்கு மாற்றப்பட்டது. பனாமா கால்வாய் ஒப்பந்த எதிர்ப்பில் இடத்தை மாற்ற நிற்பந்திக்கப்பட்டது. அந்நேரத்தில் பனாமாவின் பத்திரிகையான 'LA PRENSA' இக் கல்லூரியை "கொலைக்காரர்களுக்கான கல்லூரி" என வர்ணித்திருந்தது. முன்னை நாள் ஜனாதிபதி JORGE ILLUECA இதனை ""லத்தீன் அமெரிக்காவின் மிகப் பெரிய சீர்குலைக்கும் மையம்"" என அழைத்தார்.

1984ல் கிட்டத்தட்ட 2000 லத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் இராணுவ வீரர்கள் SOA யால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்கள் குற்றங்களுக்காக தண்டனை பெறுவதற்கு மாறாக பரிசுகள் பெற்றுவருகின்றார்கள்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் தொடர்ந்து பல வருடங்களாக மனித உரிமைகளை கிஞ்சிதமும் மதிக்காதவர்களாகவே SOA யின் மாணவர்கள் உள்ளனர். இம் மாணவர்களின் கைவரிசைகள் வருமாறு:

1.பொலிலியாவில் Bazer அரசு

2.நிக்கரக்குவா SOMAZASஆட்சியின் கீழ்



SOA பயிற்சியாளர்கள்

3.எல்சல்வல்டோர் உள்நாட்டுப் போர்சூடாக இவர்கள் SOAயின் மாணவர்களாக பறிற்சி பெற்று இராணுவ ஆட்சியாளாகளாக வளர்ந்தவாகள். SOAயின் ஒரு பிரிவான LOW INTENSITY CONFLICT (LIC) சிறப்புப் பிரிவால் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இது நன்மையில் துளியேனும் நம்பிக்கையற்றது என்பதுடன் தென் அமெரிக்கப் பகுதிகளில் அமெரிக்காவின் பிடியை இறுக்குவதற்காக (நேரடியாக அமெரிக்க இராணுவத்தைப் பாவிக்காமலும், இழப்புக்களை ஏற்படுத்தாமலும் இருக்க) இயங்கி வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்குப் பதிலாக லத்தீன் அமெரிக்க, கரீபியன் இராணுவத்தினரை யுத்தங்களில் பாவிக்க அமெரிக்க ,ராணுவத் தொழில் நுட்ப அதிகாரிகள் பயிற்றுவிக்கப் படுகின்றனர். இந்த (LIC) குறிப்பாக அரசியலில் பெரும்பான்மையான செல்வாக்கிழந்த நாடுகளில் நிலைகொள்வதற் கென்றே ஸ்தாபிக்கப்பட்டது.

ஊழல்களை எதிர்ப்பவர்கள், இராணுவச் சர்வாதிகாரிகளை எதிர்பவர்களை ""அரச எதிர்ப்பளர்கள்"" என LIC வர்ணிக்கிறது. இதன் மூலம் அவர்களை அழிக்கவும் செய்கின்றது. நிலமற்ற விவசாயிகள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற்சங்க, சமயத் தலைவர்கள் LIC யினதும், SCHOOL OF THE AMERICAS னரினதும் முக்கிய எதிரிகளாகக் கருதப்படுகின்றனர்

## அமெரிக்க இராணுவக் கல்லூரியை மூடக்கோரும் வியட்நாம்– இராணுவவீரர்கள்

சித்திரவதைப் பயிற்சியை நிறுத்து!"" வெளிநாட்டுக் கிரிமினல்கள், கொலை யாளிகள் எங்கள் வரிப்பணத்தில் பயிற்சி எடுப்தை நிறுத்து!"" என்ற கொடிகளைத் தாங்கி நூற்றுக்கணக்கான வியட்நாமில் பணிபுரிந்த முன்னனாள் அமெரிக்க இராணுவத்தினர் 1994 மே" மாத முடிவில் அமெரிக்க காங்கிரஸ் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டமானது SCHOOL OF THE AMERICAS ஐ மூடும்படியும், லத்தீன் அமெரிக்க, கரீபியன் இராணுவத்தினருக்கு பயிற்ச்சியளிப்பதை நிறுத்தும்படியும் கோரியிருந்தது.

இராணுவச் செலவுகளைக் குறைப்பதற்கான திட்டமொன்றை Joseph Kennedy என்பவர் முன் மொழிந்ததையடுத்து இந்த ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது. சென்ற ஆண்டு (1993 Septemper) 2.9 million டொலரை குறைப்பதாகவும் அறிவித்தனர். ஆனால் இத்திட்டம் 174க்கு எதிரான 256 வாக்குக ளால் தோற்கடிக்கப்பட்டது. ""மேற்படி 45 பிரதிநிதிகள் இக்கல்லூரி கொலைகாரர்கள், சர்வாதிகாரிகளக்கு நடாத்தப்படுவதை உணரவேண்டும்"" என்று "யுத்தத்தை எதிர்க்கும் வியட்நாம்- இராணுவ அதிகா ரிகள்" கூறியுள்ளனர்.

மேலும்; "SOA WATCH", ""சமாதானத்தின் சாட்சி"" போன்ற யுத்த எதிர்ப்பு அமைப் புக்களுடன் வியட்நாம் இராணுவத்தினர் அமைப்பு SOAயை மூடுவதற்கு மக்களிடம் உண்மையை பிரச்சாரம் செய்துவருகின்றது. 1994.4.11 அன்று இந்த அமைப்புக்கைச் சேர்ந்த உறுப்பினர்கள் 40 நாள் உண்ணா விரதப் போராட்டத்தை மக்களிடம் செய்தியைப் பரப்புவதற்காகவும், SOA யின் உண்மையான பயங்கரவாதத்தை தெளிவுபடுத்துவதற்காகவும் நடாத்தினர்.

## சிங்கள பெரும்தேசிய இன வெறியர்களால் ஒரு நிமிடத்திற்கு 41,000 ரூபா செலவு!

இலங்கையின் மொத்த சனத்தொகையான ஒரு கோடியே 75 லட்சத்தில், ஒரு கோடியே 19 லட்சம் பேர்- அதாவது மொத்த சனத் தொகையில் 68 சதவிகிதம்- போரின் நிமித்தம் வறுமையில் வாடுகின்றனர்.

தேசிய இனப் போருக்கு ஒரு நிமிடத்தில் 41 லட்சம் ரூபாய்களைச் செலவு செய்யும் இலங்கை இனவெறி அரசு, விரல் விட்டு எண்ணக்கூடிய கொழுத்த தரகர்கள் இசைவாக நாட்டைக் கொள்ளையிடுவதற்கு வழிவிட்டுள்ளது. யுத்தத்திற்கு பெரும் பணத்தைத் தரைவார்த்து வரும் இவ்வரசு மக்களை மேலும் பிழிந்தெடுத்து இருக்கும் கந்தலைக் கூட இழுத்துப் பறித்துவிட முயன்று வருகிறது. பேச்சு வார்த்தைகள், சமாதானம் என்கின்ற கவர்ச்சியான வார்தைகளினூடாக மக்களின் கொதிப் புக்களை அடக்கி தமது முகமூடிக் கொள்ளைகளை இலகுவாக நடாத்தியும் வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகள் சொன்ன இரண்டு கோரிக்கைகள்

(முன்பக்கத் தொடர்ச்சி)

சம்மந்தப்பட்டதுமான பிரச்சனைகளே. பேச்சு வாத்தையில் யார் வெற்றிபெறுவது என்ற வகையில் இது தீர்மானிக்கப்பட முடியாத ஒரு விடயமாகும். எமது தேசிய விடுதலைப் போராட்டமானது அதன் சரியான திசை வழிகளில் பலமடைவதிலும் இப்பிரச்சனை சார்ந்துள்ளது.

சர்வதேச ரீதியில் பேச்சு வார்த்தையி ஊடாக புலிகளை அம்பலப்படுத்துவதில் அரசானது தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. அரசு வெற்றி பெறும் இந் நிலையானது எதிர்காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தையே பலவீனப் படுத்தும். பொதுவில் புலிகளின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளையே பிரதானப் படுத்தி அம்பலப்படுத்துவதில் அரசு முன்னே செல்கிறது. இதைக் கவணத்தில் எடுத்தோ என்னவோ புலிகள் சிங்கள யுத்தக் கைதிகளை விடுதலை செய்துள்ளனர். இங்கு புலிகள் மீண்டும் தமது ஜனநாயக விரோத நிலைப்பாட்டைத் தக்கவைப்பதற்கே முனைந்துள்ளனர்.

யுத்தக்கைதிகள் விடுதலை என்பது ஓர் ஜனநாயக செயற்பாடாக எந்நேரமும் இருந்து விடுவதில்லை. யுத்தக்கைதிகளை வைத் திருப்பது எந்நேரமும் ஜனநாயக விரோதமாக இருந்து விடுவதுமில்லை.

புலிகள் அவசரமாகச் செய்ய வேண்டியது தாம் சொன்னவைகளையே. தமது சொந்தப் பிரதேசங்களைக் கொண்டு காலங்காலமாக வாழ்ந்து வந்த யாழ். முஸ்லிம் மக்கள் இன்று, அநாதரவாக அகதிகளாக எந்தவித வசதிகளுமின்றி அல்லலுறுகின்றனர்.

அவர்கள் தம் வாழ்வு யாழ். மண்ணில் என்ற கனவுகளுடன், தேர்தலைப் பகிஸ் கரித்தும், புலிகளிடம் பல வேண்டு கோள்களை உருக்கமாக விடுத்தவண்ணமே உள்ளனர்.

இந்தக் கோரிக்கைகள் புலிகளின் மனதுகளை உறுத்தாமலில்லை. புலிகளின் பலதரப்புக்களில் இருந்தும் முஸ்லிம் மக்களை வெளியேற்றியது தவறு என கூறிவருகின்றனர். இக் கூற்றுக்களின் மூலம் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முனை வதாக ஒரு வெகுஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்த முனைந்தனர்.

ஆனால் அது இன்று வெறும் வாய்வீச்சாக மட்டுமே மாறிவடுமோ என்ற அச்சம் எல்லோர் மனதையும் கவ்விவருகிறது. புலிகள் ஜனநாய கத்தையும், சர்வதேச ஆதரவையும் ஒருங்கு சேரப் பெறவும், தமிழ்மக்களின் ஒட்டு மொத்த ஆதரவை தேசிய விடுதலை யின்பால் குவித்துக் கொள்ளவும், முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்துவதும், அவர்களின் நலன்களைக் கவணத்தில் எடுப்பதும் இன்று அவசரமானதும் அவசியமானதுமான பணிகளாகும்.

புலிகளின் சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியுமென சில பேச்சு வார்த்தைகளின்போது புலிகள் கூறியிருந்தபோதிலும், அது நடைமுறையில் நடைபெறவில்லை. புலிகள் துரோகக் குழுக்களுடன் சில பேச்சு வார்த்தைகளை நடத்திவருகின்ற போதிலும், துரோகக் குழக்கள் தாம் புலிகளின் பிரதேசத்தில் இயங்க அனுமதிக்குமாறு கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். துரோகக் குழுக்களுடன் மேலதிகமாக புலிகள் என்ன பேசினார்கள் என்பதை விடுத்து துரோகக் குழக்களை புலிகள் தமது பிரதேசத்தில் இயங்க அனுமதியளிப்பது தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதில் போய் முடியும்.

புலிகள் துரோகக் குழுக்களுடன் பேசுவதும், பேசாமல் விடுவதும் ஒரு முக்கியமான விடயமேயல்ல: மாறாக துரோகக் குழக்களை எதிர்த்தும், ஜனநாய கத்திற்குக் குரல் கொடுப்பவர்களுக்கு-ஜனநாயகத்தை வழங்க முன்வருவதே முக்கியமானதாகும். இந்தவகையில்

- கடந்தகாலங்களில் ஜனநாயகத் தைக் கோரியவர்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப் பட்டவர்களை உடன் விடுதலை செய்வது.
- N.L.F.T, P.L.F.T, தீப்பொறி, பாசறை, பேரவை,.. போன்ற உண்மையான தேசவிடுதலை சக்திகளை விடுதலை செய்வது.
- விடுதலையை மட்டுமே நேசித்து துரோகக் குழுக்களுக்குள் இருந்த வர்களும், மற்றும் துரோகத்திற்கு துணை போகதவர்களையும் விடுதலை செய்வது.
- கடந்தகாலங்களில் இழைத்த தவறுகளை விமர்சனத்துடன் ஏற் றுக் கொள்வதும், ஜனநாயகத் தின் பெயரால் கொல்லப் பட்டவர்களை இனம் ⊃



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டுவதும்.

- இந்தியா, இலங்கை, மற்றும் ஏகாதிபத்தியங்களை எதிர்க்கும் அனைத்து சக்திகளுக்கும் ஜனநாயகத்தை வழங்கி இயங்க அனுமதிப்பதும்.

இவைகளின் மூலம் மட்டுமே தேசிய விடுதலைப் போராட்டம் பலமடையவும், வெற்றிபெறவும், பரந்துபட்ட மக்களின் ஆதரவையும், சர்வதேச சமூகத்தின் தார்மீக ஆதரவையும் ஒன்றுதிரட்டி விடவும் முடியும்.

இன்னும் காலம் கடந்து விடவில்லை. தேசிய விடுதலையின்பால் இவற்றைக் கவனத்தில் எடுப்பதன் மூலம் இலங்கை அரசையும், அவற்றின் தொங்குதசைகளான துரோகக் குழுக்களையும் பலவீனமடையச் செய்வதுடன், தேசிய விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்கவும் முடியும். குறைந்தபட்சம் இந்த முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக்கைகளை புலிகள் வழங்க முன்வரவேண்டும்.

## பேச்சு வார்த்தையில்..

**(முன்பக்கத் தொடர்ச்சி)**

இவ்வொப்பந்த நாடகம் அரங் கேறியது. கடந்த சமர் இதழ்களில் இவற்றை நாம் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தோம். முற் போக்கெனத் தம்மைக் கூறிக்கொள்ளும் சிலர் பேச்சுவார்த்தையின் பொய்மையை அம்பலப்படுத்தத் தவறி, மக்களை பேச்சுவார்த்தை என்ற கனவுக் குள் ஆழ்த்தியதுடன், இன்னும் சிலர் வெளிநாட்டு மத்தியஸ்தங்களுடன் சேர்ந்து கண்காணிப்பிலும் ஈடுபட்டு வந்த இவர்களுக் கெல்லாமிது- இருப்புக் கொள்ளாத நேரம். ''புலிகள் எல்லாவற்றை யும் குளப்பியடிக்கிறார்கள்'' எனப் புலிகளை வாயில் போடுவதைத் தவிரவும், சந்திரிக்காவின் இவாத அரசியலினது மையப்பாட்டின் உயிர் நாடியை திறந்து காட்டுவதற்கும் தயக்கம் காட்டி வருகின்றனர்.

அரசு - புலிகள் பேச்சுவார்த்தையில் அரசானது இயன்றவரை புலிகளை அம்பலப்படுத்துவதில் எல்லா வழி வகைகளையும் கையாண்டு வந்தது. சர்வதேச ரீதியாக சந்திரிகா அரசுபற்றிய மாயயை ஏற்படுத்தி, அதைத் தக்க வைப்பதிலும் வெற்றிபெற்றது. வெளிநாட்டு ஆளும் அரசுகளின் உறுதுணையுடன் எதுவித எதிர்ப்போ, கரச்சல்களோ இல்லாமல் இதைச் சுலபமாகச் செய்வதில் சந்திரிகா அரசு ஓரளவுக்கேனும் வெற்றியீட்டியுள்ளது.

மேற்குலக அரசுகளும் இதைச் சாதகமாகக் கொண்டு தமிழ் அகதிகளின் மீது தமது நிறவாதத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விடுவதற்கும், புதிய அகதிகளைத் தடுக்க, புதிய சந்திரிகா அரசானது ஜனநாயகமானது எனப் பறைசாற்றியபடி அகதிகளுக்கு எதிரான பல கடுமையான சட்டங்களை இயற்றுவதற்கும், அகதி அந்தஸத்துக் கோரப்பட்டு எதுவித புகலிட, வாழ்விட வசதியும் வழங்காத அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கும், சந்திரிகா அரசின் போலி ஜனநாயகச் சின்னத்தை துரும்புச் சீட்டாக்கி நடவடிக்கையும் எடுத்து வருகின்றது.

புலிகளே பேச்சுவார்த்தையைக் குளப்புபவர்கள் எனச் சித்தரித்து வரையப் பட்ட ஒரு போலி வரைபடம், இன்று உயிரூட்டம் பெற்று வருகின்றது.

கடந்த காலத்தில் தமிழ்த் தேசியவிடுதலை அனுதாபிகள், அகதிகள் நலன்களில் ஈடுபட்டுவந்த உதவி அமைப்புக்கள், தனிநபர்கள், மத ஸ்தாபனங்கள் என்றெல்லாம் புலிகளின் மீது குற்றச்சாட்டை அள்ளிச் சுமத்தத் தொடங்கிவிட்டன. இதுபோன்று சிங்கள, தமிழ் மக்கள் மத்தியிலும் சந்திரிகா அரசானது ஒரு பெரும் வெற்றிகரமான பிரச்சாரத்தை ஊதியும் வருகிறது.

இவைக ளெல்லாம் நடந்தேற புலிகளின் ராஜதந்திர தவறே முக்கிய காரணங்களாக அமைகின்றது. புதிய அரசு இனவாத அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டது என்பதை அம்பலப்படுத்தும் வழி வகையில் புலிகளின் பேச்சுவார்த்தை ஒரு அணுவள வேனும் அமையவில்லை.

முன்னய கால புலிகள் - பிரேமதாஸா பேச்சுவார்த்தையில் புலிகள் விட்ட தவறும், அதில் எச்சரிக்கையுடன் அணுக முற்பட்ட புலிகள் பிரேமதாஸா அரசையும், சந்திரிகா அரசையும் ஒரே மாதிரியான வகையில் மதிப்பிட்டனர். கடந்த பேச்சுவார்த்தையில் என்ன தவறுவிட்டோம் என்பதைக் கொண்டு இப் பேச்சுவார்த்தையை அதற்குள் நகர்த்தியிருந்தனர். சந்திரிகா அரசானது எந்த காலகட்டத்தில், எந்த முகத்தோடு, என்ன அணுகுமுறையுடன் அரங்கிலுள்ளது என்ற பர்வையைக் காணத் தவறியது

➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளின் தோல்விக்கு இட்டுச் சென்றது. இவ்வரசானது இனவாதத்தில் ஊசலாடும் நிலையில், இனவாதத்தின் தீர்வுக்கான அறிவித்தலுடன், ஜனநாயக முகமூடி அணிந்து, தீர்வு பற்றிய வாய்நிறைந்த பொய்களுடன் சிங்கள மக்களின் பொருளாதாரக் கோரிக்கையுடன் ஒரு கருத்தைக் கட்டியபடியே கோலாகலமாக ஆட்சிப்பீடம் ஏறியது. இனவாதத்தையோ, யுத்தத்தையோ, பாசிச நடைமுறையையோ இவ்வரசு வெளிப்படுத்தி யிருக்கவில்லை.

இந்நிலையில் பேச்சுவார்த்தையில் புலிகள் வைத்த கோரிக்கைகள் பிரேமதாசா அரசுக்குப் பொருந்துபவையாக மட்டுமே இருந்தன. சந்திரிகா அரசுக்கு எதிராக, அதன் உள்ளார்ந்த இனவாத அரசியல் இருப்பைப் புட்டு வைப்பதற்குப் போதுமான பலமுள்ள வையாக இக்கோரிக்கைகள் அமைந்தவை யல்ல.

சந்திரிகா அரசின் முன் இக்கோரிக்கைகள் இரண்டாம் பட்சக் கோரிக்கைகளாகவே வைத்திருக்க முடியும். முதன்மைப்பட்ட முதலாவது கோரிக்கையாக உடனடியாக அரசியல் தீர்வை முன்வைக்கக் கோருகின்ற அரசியல் மையப்பட்ட கோரிக்கையையே வைத்திருக்க வேண்டும்.

சர்வதேச ரீதியில் அரசு தீர்வு வைக்கத் தவறும்போது அது இயல்பிலேயே அம்பலப்பட்டுப் போயிருக்கும். இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பூநகரி முகாம் அகற்றல், மீன்பிடி வளையத் தளர்த்தல் என்பது சர்வதேச ரீதியில் பலவீனமான ஒரு பிரச்சார வடிவமே. ஏனெனில்: யுத்தம் செய்யும் இரு தரப்பினருக்கும் இராணுவ வடிவமும், அதன் முக்கிய பகுதிகளும் அவசிய மானதாகவே உள்ளது. முகாமை நீக்கவில்லை என்ற வாதம் எழுந்தமாத்திரத்தில் சர்வதேச சமூகத்தின் முன்னால் எடுபடக்கூடியதோ, இலகுவில் அரசை அம்பலப்படுத்தக் கூடியதோ அல்ல. இது சொந்தத் தமிழ் மக்கள் மத்தியிலும் அரசால் மறு பிரச்சார வடிவத்தினூடு வெற்றி கொள்ளவும் வாய்ப்பளிக்கும்.

அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு? என அரசு நோக்கி சுட்டுவிரல் அசைத்துக் கோருவதும், அதை தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச சமூகம் முன்னால் இட்டுச் செல்வதனூடாக அரசை, அதன் ஆணிவேர் படுகையிலிருந்தே அம்பலப் படுத்தியிருக்க முடியும்.

ஏனெனில்: இனவாத சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் தொங்கு தசைகளும் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வை என்றுமே முன்மொழிந்தது கிடையாது. ஆரப்பாட்டமாக ஆட்சிக்கு வந்து பலமாதங்கள் ஆகியும் எந்தத் தீர்வையும் இது வைத்துவிடவில்லை. புலிகள் முதலில் அரசியல் தீர்வையும், இரண்டாவதாக இராணுவ முக்கியத்துவம் கொண்ட -பூநகரி அகற்றல்- கோரிக்கையையும் (இது எந்தளவு மக்கள் சாாந்ததாக -குடாநாட்டு மக்களின் போக்குவரத்து- இருந்தபோதும், இது இராணுவம் சார்ந்ததே) வைத்திருப்பின், புலிகள் இன்று பலமான நிலைக்கு முன்னேறியிருக்க முடியும்.

அரசியல் தீர்வை தொடர்ச்சியாக வலியுறுத்தி தமிழ், சிங்கள மக்கள் மத்தியிலும், சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் ஒருங்குசேர எடுத்துச் சென்றிருப்பின், அரசு தடுமாறி தவிர்க்க முடியாமல் இரண்டாவது கோரிக்கையை அமுல்படுத்த முற்படுத்தியிருக்கலாம். இதன் மூலம் புலிகள் அரசை வெகுவாக அம்பலப்படுத்தியும், இராணுவ முக்கியத்துவம் கொண்ட இரண்டாவது கோரிக்கையை வென்றும், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒரு பரிணாம வளர்ச்சிக்கு நகர்த்தியிருக்கவும், மீளெழுச்சி கொள்ளவும் செய்திருக்க முடியும்..

---

## □□இலங்கையில் விற்பனையாகும் சிறுவர்கள்.

ஆடு, மாடுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப்போல பிஞ்சுக் குழந்தைகளை ஏற்றுமதிசெய்யும் வியாபாரம் இலங்கையில் இப்போது கொடிகட்டிப் பறக்கிறது. கடந்த பத்துவருடத்தில் 11,862 குழந்தைகள் இவ்வாறு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனர். மேலைநாட்டுத் தம்பதிகளால் தத்தெடுத்துக் கொள்ளப்படும் இக்குழந்தைகள் ஏறத்தாள 5000 டொலர்களுக்கு இலங்கை த்தாய்மார்களால் விற்கப்பட்டுள்ளனர். பத்துமாதம் சுமந்துபெற்ற குழந்தையை விற்குமளவுக்கு இலங்கைத் தாய்மார்களைப் பிடித்துள்ள வறுமையின் அவலத்தையும், லேைநாடுகளில் பெருகிவரும் இனவெறியின் காரணமாக இக் குழந்தைகளின் எதிர் காலத்தையும் எண்ணும்போது மிகவும் வேதனைக்குரியதாக இருக்கிறது.

(நன்றி- புதிய ஜனநாயகம்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விவாத மேடை

## அதிகரித்துவரும் தனித் தேசியவாதம் சமூகமாற்றப் பாதையில் கவியும் இருள்...

இக் கட்டுரை விவாதத்திற்குரியது.

-சமர் ஆர்.கு-

**இலங்கைத் தீவின் இன்றைய பிரதான பிரச்சனையாக தமிழ்த் தேசிய இனப் பிரச்சனை நிலவுகின்றது. தேசிய இனப் பிரச்சனைகள் தன்னெழுச்சியாக, இயல்பாக உருவெடுப்பதில்லை. தமது நலன்களுக்காக பிற்போக்கான**

அரசியல் சக்திகள் இன முரண்பாடுகளை உருவாக்கி வளர்த்துச் செல்கின்றன. எளிதாக மக்களை ஈர்க்கக்கூடிய தேசியவெறி, மதவெறி களைத் தூண்டிவிடுவதன் மூலம் தமது வர்க்க நலன்களைப் பாதுகாப்பதற்கும் மக்கள் தமது துயரங்கள், சுரண்டல் ஒடுக்குமுறைகளின் உண்மைக்காரணங்களைக் கண்டறிவதிலிருந்து அவர்களைத் திசைதிருப்பி தமது இருப்பைத் தக்கவைக்கவும் தேசியவெறி, மதவெறியை சுரண்டும் வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அரசியல் தலைமைகள் வளர்க்கின்றன. இயல்பாக விரோதமற்று ஐக்கியமாக வாழும் சமூகத்தில் முரண்பாடுகளுக்கான தீப்பொறி பிற்போக்கான அரசியல் பிரிவுகளால் இடப்படுவதை தேசிய முரண்பாடு மதமுரண்பாடு கூர்மை பெற்றிருக்கும் அனைத்துக் களங்களிலும் வெளிப்படையாகவே அவதானிக்கவியலும்.

இலங்கைத் தீவிலும் சிறுபான்மைத் தேசிய இனங்களுக் கெதிரான நடவடிக்கைகளும், இனப் பாரபட்ச நடவடிக்கைகளும் தேசியம் என்கின்ற தளத்தின் அளவுக்குள்ளேயே உருவெடுத்த தொன்றல்ல. இலங்கைத் தீவில் தேசிய இனப்பிரச்சனைகள், இன அடிப்படையிலமைந்த பாரபட்சங்கள் உருவெடுத்த காலகட்டத்தில் செயலாற்றிய அரசியல் தலைமைகள் தத்தமது தேசிய இன நலன்களுக்காகவே அந்நடவடிக் கைகளை ஆற்றியிருந்தன என்று யாரும் வாதிப்பார்களெனின்: அது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

பிரித்தானியரிடமிருந்து மேல்தட்டு வர்க்க பிரதிநிதிகளிடம் கைமாறியதைத் தொடர்ந்து விரைவில் மலையகத் தமிழ்த் தொழிலாளர்களுக் கெதிராக கொண்டு வரப்பட்ட அநீதியான சட்டங்கள் இனரீதியான அம்சத்தைவிட பெருமளவு பொருளாதார, வர்க்க அடிப்படையிலமைந்த ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணங்களையே கொண்டிருந்தன. அக்காலகட்டத்தில் பாராளுமன்றத்தில் இடதுசாரிக் கட்சிகளின் பலம் உயர் வர்க்கத்தினரின் அரசியல் தலைமையை அச்சுறுத்தும் அளவிற்கு இருந்தது. அரசியல் தலைமை தமது வர்க்க மேலான்மையை நிலை நிறுத்து வதற்காகவே இடதுசாரிக் கட்சிகளது முக்கிய ஓட்டுவங்கியாக இருந்தவர்களும், பல தொகுதிகளில் அன்றைய ஆளும் வர்க்க பிரதிநிதியான ஐக்கிய. தேசிய. கட்சிக்கு பாதகமான விளைவைக் கொடுக்கும் வாக்குக்களைக் கொண்டி ருந்தவர்களுமான மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர் ஆக்குவதற்கும் அவர்களது வாக்குரிமையை பறித்து விடுவதற்குமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவ்வாறான இனரீதியான மேலாடையைக் கொண்ட இனப் பாரபட்ச நடவடிக்கைகளின் பின்னால் சுரண்டும் மேல்தட்டு வர்க்கத்தவர்களது நலன்களுக்கான, பொருளாதாரக் காரணங்களே உள்ளுடலாக இருந்தன.

மேல்தட்டு வர்க்கத்தவர்களின் அரசியல் தலைமைகள் மக்களிடையே இயல்பாகவுள்ள தேசிய பெருமிதம், மதரீதியான உணர்வுகள், நம்பிக்கைகளை தமது நலன்களைத் தக்கவைக்கும் திசையில் கேடாகப் பயன்படுத்தி இன முரண்பாடுகளை வளர்த்தெடுத்தபோது இலங்கையின் பரந்துபட்ட மக்களை இத் தீமையான கருத்தாக்கங்களிலிருந்து மீடெடுத்து சமூக விடுதலைக்கான போராட்டப் பாதையில் இட்டுச் செல்லக்கூடிய புரட்சிகர தன்மை கொண்ட தலைமை எதுவும் உழைக்கும் வர்க்கங்களை அன்றைய காலகட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கவில்லை. பாராளுமன்ற எல்லைக்குள் போலி எதிர்ப்பைக் காட்டிவிட்டு உயர் வர்க்கத்தவர்களுடன் சமரசமாகி பாராளுமன்றக் கதிரைகளைப் பங்குபோட்ட போலிக் கம்யூனிஸ்டுக்களும், லண்டன் சர்வகலாசாலை யில் உருவான கம்யூனிசப் பிரமுகர்களும் மக்களை அணிதிரட்டிச் செல்லும் புரட்சிகரப் போராட்ட திசைவழிக்கு துரோகம் இழைத்த வர்களாகவிருந்து, உழைக்கும் வர்க்க பிரிவினரை அநாதரவான நிலைக்கு உள்ளாக்கினர். இதன்மூலம் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் கருத்தாக்கங்கள் அன்றைய நாட்டின் நிலைமைகள் இடதுசாரிக் கட்சிகள் எதிர்காலத்தில் அரசாங்கம் அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்டிருந்தபோது, மேல் தட்டு வர்க்கத்தவர்கள்து மக்கள்மீது ஆளுமை செலுத்துவதற்கு வழிசமைத்துக் கொடுத்தனர்.

இன அடிப்படையிலான அரசியல் முன்னிலை பெற்று அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் சுலபமான வழியாக சுரண்டும் வர்க்க அரசியற் பிரிவுகள் இம் முரண்பாட்டை கைக்கொள்ளத் தொடங்கின. இதன் தொடர்ச்சியாகவே தமிழ்த் தேசியத்தின் மீதான பாரபட்ச, இன ஒடுக்குமுறை நடவடிக்கைகள் உச்ச நிலையைப் பெற்றன. பொருளாதார நலன்களின் தொப்புள் கொடியிலிருந்து உருவான தேசிய இன முரண்பாடுகள் பெரும்பான்மைத் தேசிய இன வெறியர்களின் கூட்டுடன் வளர்த்துச் செல்லப்பட்டது. இன முரண்பாடு சிறுபான்மை தமிழ்த் தேசியத்தின் அனைத்து மக்களையும் நேரடியாகப் பாதிக்கின்ற கட்டத்தை வந்தடைந்தபின், கணிசமான கால கட்டத்திற்கு இனப்பாகுபாடும், இன ஒடுக்கு முறையும் நீடித்தபோது இவற்றின் தோற்றுவாய்க்கான காரணங்கள் பின்தள்ளப்பட்டு நடை முறையில் தேசியரீதியிலான பூசல் அரங்கின் முன்னணிக்கு வந்தது.

சுரண்டும் வர்க்கத்தினர் தமது நலன்களுக்காக, தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள தோற்றுவித்து வளர்த்துவிட்ட இனமுரண்பாடு வட-கிழ தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கே அச்சுறுத்தலாக மாறியதன் பின்னர் தமிழ்த் தேசியத்தின் அனைத்து வர்க்கப் பிரிவுகளும் தேசிய விடுதலைப் போரில் குதித்தன. இன முரண்பாடு உருவாகி வளர்ந்து வந்த காலகட்டத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் புரட்சிகர பிரிவினர் இன ஒடுக்கு முறைக் கெதிரான புரட்சிகரப் போரை தமது கரங்களி லெடுத்து அதற்காதரவாக சிங்களப் புரட்சிகர பிரிவை இணைத்துக் கொள்வதன் மூலம் இன ஐக்கியத்தைச் சாதிக்கின்ற திசையில் செயாற்றாது ஸ்தல நிலைமைகளுக்குப் பொருந்தாத சூத்திரங்களுடன் கட்டுண்டு, தமிழ்த் தேசிய இன ஒடுக்கல்களுக்கெதிரான போரை தமிழ்த் தேசியத்தின் மேல்தட்டுவர்க்கத்தினர் ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது வர்க்க நலன்களுக்குகந்த வகையில் கையாளுதற்கும், தேசிய விடுதலைப்போரில் தமது ஆதிக்கத்தை யேற்படுத்தவும் வழியேற்படுத்தினர்.

தமிழ்த் தேசியத்தின் புரட்சிகரப் பிரிவினர் இன ஒடுக்கலுக் கெதிராக காத்திரமான பாத்திரமாற்றி நிலைமைகளைத் தமக்கு சாதகமாக்குவதில் தவறிழைத்தமையால் பெரும்பான்மை இனமும், மற்றைய சிறுபான்மை இனங்களும் தமது தேசிய இனங்களின் மேல்தட்டு வர்க்கத்தவரின் கருத்தாக்கங்களின் கீழ், அதன் ஆளுமையின் கீழ் வழிநடாத்தப்பட்டன.

சிங்களப் பேரினவாதத்திற் கெதிராக முற்போக்கான தமிழ்த் தேசியம் உருவெடுப்பதற்குப் பதிலாக பிற்போக்கான தமிழ்த் தேசியவாதம் வளர்க்கப்பட்டன. தமிழரசுக் கட்சியும், தொடர்ந்து கூட்டணியும் தமது அரசியல் நலன்களுக்கும், வாக்குக்களைப் பெறுவதற்கும் தேசிய வெறியை முன்தள்ளின. ஆண்டபரம்பரைக் கருத்துகளும், சிங்கள மக்களின் தோலில் செருப்புத்தைக்கும் உரைகளும், சிங்கள மக்களை இழிவுபடுத்தும் கருத்தாக்கங்களும் இவற்றின் வெளிப்பாடுகளே. தமிழீழப் போராட்டம் உக்கிரமடைந்தபின், சிங்கள அப்பாவி மக்கள் மீதான அநுராதபுரப் படுகொலை, மற்றும் பல படுகொலைகள், முஸ்லீம் மக்கள் மீதான படுகொலைகள் தமிழ்ப் போராளிக் குழுக்களால் நிகழ்த்தப்படும் போது தமிழ்மக்களில் பொரும்பான்மையோர் அவற்றை அங்கீகரித்துக் கொள்வதற்கு முன்பு வளர்க்கப்பட்ட இக்கருத்துக்களின் ஆதிக்கமே காரணமாகவுள்ளது.

இனப்பாகுபாடு, ஒடக்குமுறை நடவடிக்கைகள் உச்ச நிலையடைந்து இனப்படு கொலைகளாக மாறியபோது அக்கட்டத்தின் தமிழ்த் தேசியத்தின் தேவையான தேசிய விடுதலைப்போர் பல தளங்களில் எழுந்தது. நீண்டகாலம் தமிழ்த் தேசியத்தின் மேல்த்தட்டு வர்க்கத்தினரால் வளர்க்கப்பட்டிருந்த பிற்போக்குத் தேசியவாத கருத்துகளையும் பெருமளவுக்கு உள்வாங்கியதாக அவ் விளைநிலத்திலிருந்தே தேசிய விடுதலைப் போராட்டம், பிரிவினைப் போராட்டமாக உருவெடுத்தது. தமிழ்த்தேசிய விடுதலைப்போரை முற்போக்கான தேசிய விடுதலைப் போராட்டமாகவும், சமூக மாற்றத்திற்கான புரட்சிப்பாதையிலும் இட்டுச்செல்வதற்கும் 80 களின் ஆரம்பத்தில் சில புரட்சிகரசக்திகள் முயன்றபோதும் அகநிலையான காரணங்களும், பெருமளவிற்கப் புறநிலைக் காரணிகளும் தமிழ்த் தேசியவிடுதலைப் போரில் பிற்போக்கான சக்திகளது தலைமையை உறுதிப்படுத்தின. தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டம் மிக விரைவிலேயே தமிழ்த்தேசிய இனமக்களது விடுதலைக்கு எதிரான திசையில் சென்றடைந்தது.

ஒரு தேசியவிடுதலைப் போராட்டத்தின் முற்போக்கான அம்சங்கள் சகலதையும் ஊறுபடுத்திவிட்டு தமிழ்த்தேசியத்தினது நலனுக்கு எதிரானதாக மட்டுமல்லாது இலங்கைத்தீவில் நடைபெறக்கூடிய சமூகமாற்றத்திற்கான போராட்டப் பாதைகளுக்கு எதிரான மையமாக உருப்பெறக்கூடிய வகையில் பிற்போக்கான அம்சங்களால் வழிநடத்தப்படும் தலைமையின் ஏக ஆதிக்கம் பெற்றதாக தமிழ்த் தேசிய விடுதலைப்போர் உருவெடுத்துள்ளது. தமிழ்த்தேசியத்தின் பிரதான முரண்பாடாக இனமுரண்பாடும். இன்றைய இன்றியமையாத தேவையாக தேசியவிடுதலைப் போரும் உள்ளபோதே இன்று நடைமுறையிலுள்ள தேசிய விடுதலைப்போர் அதன் தலைமையின் பிற்போக்கான பாத்திரத்தின் காரணத்தினால் மக்களது விடுதலையை உத்தரவாதப் படுத்தாததாகவும், பிற சிறுபான்மை இனங்களை ஒடுக்குகின்ற படுபிற்போக்கான நிலையை எடுத்துள்ளதையும் கண்கூடாகக் காணவியலும்..

இன்றைய தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் மக்களுக்கு ஜனநாயகத்தை மறுக்கின்ற இராணுவ சர்வாதிகார தலைமையால் முன்னெடுக்கப்படுவதாலும், அவர்களது மக்கள் விரோத நலனைக் கொண்டதுமான அரசியல் பின்னணியானது தமிழ்த்தேசிய இன மக்களது சுதந்திரமான, சுபீட்சமான வாழ்வை உத்தரவாதப்படுத்தப் போவதில்லை என்கின்ற வகையில் தமிழ்த் தேசிய வடுதலைப் போராட்டத்திற்கு மாற்று புரட்சிகரத் தலைமை ஏற்படுத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசியத்தின் முற்போக்கான பிரிவினர் தம் கருத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இம் முற்போக்குப் பிரிவினரிடையே தமிழ்த் ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய விடுதலைப்போரை தமிழ்ச் சமூகத்தின் அடிப்படைச் சமூகமாற்றத்திற்கான திசைவழியே எடுத்துச் செல்ல வேண்டு மென்கின்ற புரட்சிகர பொது நோக்கு எல்லாத் தரப்புக்களிலிருந்தும் வெளிப்படுவதை அவதானிக்க முடிகின்ற போதும் இப்பிரிவினர் வெளிப்படுத்துகின்ற, பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சித்தாந்தக் கோட்பாடுகள், சமூக மாற்றத்தை நிகழ்துகின்ற திசைவழிப்பட்டதா? அல்லது சமூகமாற்றத் திசையின் நலன்களுக்கு எதிரானதாக புரட்சிகர உழைக்கும் வாக்கத்தினரின் போராட்ட ஆற்றலை தமது வாக்கப்பிரிவின் நலன்களுக்கு பயன்படுத்து கின்ற உள்ளடக்கம் கொண்டதா? என்பதை உழைக்கும் வர்க்கப்பிரிவினர் தெளிவாக அடையாளம் காணவேண்டியவர்களாக உள்ளனர்.

புரட்சிகர அரசியல் மாற்று என்கின்ற மாற்று அரசியல் முகாமிலிருந்து வருகின்ற பலதரப்பட்ட சித்தாந்த கோட்பாடுகளில் எது சமூக அடுக்குகளில் கீழ்மட்டங் களிலும், பெரும்பான்மை மக்கள் திரளின் ஆதரவுமுள்ள உழைக்கும் மக்கட்பிரி வினரை உத்தரவாதப் படுத்துவது எத்தத்துவம்? தமிழ்த் தேசியத்தின் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் நலன்களை நிறைவேற்றுவதுடன் அப்பிராந்தியத்திலுள்ள மக்களின், மனித குலத்தின் விடுதலைக்கான போராட்டத் திசைவழியுடன் தனது தேசிய விடுதலைப் போராட்டத்தை இணைத்துவிடும் திசை யைக் கொண்டுள்ளது என்பதை இன்றைய சுரண்டல் பொருளாதார அமைப்பை தகர்த்து புதிய சமூக அமைப்பைப் படைப்பதன் மூலம் மட்டுமே தமது நலன்களை வென்றெடுக்கக் கூடியவர்க ளாகவுள்ள புரட்சிகர வர்க்கத்தினர், புரட்சிகர சிந்தனையாளர்கள் தெளிவாக அடையாளம் காண்பதற்கு கவனம் குவிக்கவேண்டியது இன்றைய அவசியமான தேவையாகவுள்ளது. முற்போக்கான அரசியற் பிரிவினரிடையே மனம் திறந்த விவாதம் மூலமாக பொதுக்கருத்தை எட்டுதல், பொதுவான சித்தாந்தக் கோட்பாட்டில் ஐக்கியப்படுதல், போன்று அண்மைக்காலமாக பலத்து ஒலித்த குரல்கள் மறைந்துபோய் வெவ்வேறு பிரிவினர் தமது தரப்புக் கோட்பாடுகளை உருவாக்குவதில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்கவியலும். ஐக்கியப்பட்டு பொதுக்கருத்தை எட்டுதல் என்பது நல்ல நோக்காக இருந்தபோதும் அடிப்படையான உண்மையுடன் முரண்பட்டதாக அவ் நோக்க மிருந்தமையால் அவ்வணுகு முறை அரங்கிலிருந்து அகன்றுவிட்டதைக் காணலாம். இன்று யதார்த்த நிலையின் உண்மை வெளிப்பாடாக, தமிழ் முற்போக்கு அரசியல் சக்திகளுக்கிடையே தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க் கப்பிரிவின் நலன் சார்ந்து கோட்பாட் டுருவாக்கம் நிகழ்த்துவதும் அவ்வடிப் படையில் அணிசேர்வதும் நிகழ்வுப் போக்காக உள்ளது.

இன்று உலகுதழுவிய அளவிலான பொருளாதார வலைப்பின்னல் நடவடிக் கைகள், வளர்ச்சியடைந்த தொழில்நுட்பம் போன்ற காரணிகளால் உலகின் தேசங்கள், சமூகங்கள் மிக நெருக்கமாக பிணைக்கப்பட்டு வருவது அதிகரிக்கும் நிகழ்வுப்போக்காக உள்ளது. தேசங்களோ, தேசிய இனங்களது இயக்கப்பாட்டு நடவடிக்கைகளோ அவ் எல்லைகளு டனேயே சுருங்கி விடுபவையாக இல்லை. அவை இன்றைய சர்வதேச நிலவரங்களுடன் பரஸ்பரம் தமக்கேயுரிய தொடர்புகளைக் கொண்டுள்ளன. ஏகாதிபத்திய பொருளாதார வலைபின்னல் நடவடிக்கைகளும், புதிய உலக ஒழுங்கமைப்பு என்ற பெயரில் பின்தங்கிய ஏழைநாடுகள் மீது அதிகரித்து வருகின்ற மறுகாலனியாக்கல் நடவடிக் கைகளும் அத்தேசங்களின் சுயாதி பத்தியத்தை கேலிக்குரியதாகவும் கேள்விக் குரியதாகவுமாக்கி வருகின்றன. எமது தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட் டமும், அதன் வெற்றியும் பிராந்திய சர்வதேச அரசியல், பொருளாதார நிலைமைகளுடன் தொடர்புறாது தனியே தேசிய சுயாதீனத் தளத்தில் மட்டும் நடைபெறப் போவதில்லை.

இன்று மேல்நிலை வல்லரசுகள், ஏகாதிபத்தியங்கள் தமது பொருளாதார நலன்களுக்காக வறிய மூன்றாம் உலக நாடுகளை தமது வேட்டைக் காடாக்கி வருகின்றன. அந்நாடுகளின் மீது ஏகாதிபத்திய நலன்களுக்கு சார்பான பொருளாதார, கலாச்சார ஒப்பந்தங்களைத் திணித்து அந்நாடுகளின் அரசியல், பொருளாதார, கலாச்சார சுயத்தைச் சிதைத்து வருகின்றார்கள். அந்நாடுகளின் தரகுமுதலாளிய ஆளும் கும்பல்கள் இத் துரோகங்களைக்குத் துணைபோகின்றனர். இந் நாடுகளின் 'பட்ஜெட்' கள் கூட ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஏகாதிபத்தியங்களின் பிரதிநிதிகளாக செயற்படும் உலகவங்கி i.M.F போன்றவற்றின் மேற்பார்வையில் தயாரிக்கப்படுகின்றன. சோவியத் ஒன்றியத்தின் சிதைவின் பின் பேரம் பேசுதற்குக் கூட ஒருதரப்பும் அற்ற நிலைமையில் மூன்றாம் உலக நாடுகள் புதிய உலக ஒழுங்மமைப்பு என்கின்ற பெயரில் ஏகாதிபத்திய நலன் சார்ந்த நடவடிக்கைகளால் தமது தேச நலன்களை இழந்து வருகின்றார்கள். தமது ஆதிக்கப் போக்குக்கு எதிராக உலகின் எம்மூலையில் சிறு எதிர்ப்புக்குரல் கிளம்பினும் வெறியுடன் பாய்ந்து அதை அழித்துவிடும் மூர்க்கத்துடன் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் இன்று செயற்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையை தனது கைப்பொம்மை அமைப்பாக்கி பொருளாதாரத் தடை, இராணுவ தலையீடு போன்ற அனைத்து வழிகளிலும் ஏகாதிபத்தியங்கள் இதைச் சாதித்து வருகின்றன. ஏகாதிபத்திய பொருளாதார நலன்களக்கு எதிராக உருவெடுக்கும் எப்போராட்டப் போக்குகளும் இச்சர்வதேச நிலைமைகளை எதிர்கொண்டே தன்னை நிலைநிறுத்தவியலும்.

இன்று தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கும், விடுதலைக்குமான போராட்டமாக தேசிய விடுதலைப் போராட்டம் உள்ளது. தமிழ்த் தேசியத்தின் பிரதான முரண்பாடாக இனமுரண்பாடு நிலவும்வரை தேசிய இனப்போராட்டத்தை புரட்சிகர சக்திகள் கையிலெடுக்கவேண்டும். புரட்சிகர சக்திகள் தேசிய இனப்போரை கையகப்படுத்தி தேசிய விடுதலையை எவ்வகைகளினூடாக சமூகமாற்றப் பாதையில், உழைப்பாளி வர்க்கத்தவரது நலன்களது திசைவழியே நகர்த்திச்செல்ல இயலு மென்பதற்கான அடிப்படைகளைக் கண்டறிந்து பூர்த்தி செய்வதன் மூலமே அவர்கள் புரட்சிகர வர்க்கங்களின் அரசியற் பிரதிநிதிகளாக செயற்படுவர். உழைக்கும் வர்க்கத்தவர்களுக்கும், சமூகமாற்றப் போராட்டத் திசைவழிக்கும் பாதகமான, கேடு விளைவிக்கும் கோட்பாடுகளை உருவாக்கி அவற்றை புரட்சிகர வர்க்கத்தவர்களது கோட்பாடு எனத் திரித்துக்காட்டும் அரசியல் சக்திகள் எப்பிரிவின் நலன்களுக்காக பெரும்பான்மையான உழைக்கும் வர்க்க மக்களின் தியாகத்தையும், போராட்ட ஆற்றலையும் பயன்படுத்த முனைகின்றார்கள் என்பதை சரியாக அடையாளம் கண்டு அவர்களது கோட்பாடுகளின் சாரத்தை அம்பலப்படுத்த வேண்டியதும் புரட்சிகரவர்க்கப் பிரதிநிதிகளின் அவசியமான பணியாகும்.

இன்று தமிழ்த் தேசிய விடுதலைப் போரிற்கு மாற்றுதலைமை அளிக்க வேண்டுமெனக் கோருகின்ற முற்போக்கு அரசியல் முகாமினுள் வெவ்வேறு கோட்பாடுகளின் உருவாக்கம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. ஒவ்வொரு பிரிவினரும் தமதுகோட்பாடுகளே சமுதாய வளர்ச்சியை உத்தரவாதப்படுத்துகின்ற இயங்கியல் அடிப்படையிலானது, ஸ்தல யதார்த்த நிலைமைகளக்கு பொருத்தமானதென விளக்கி வருகின்றனர். இவ்வகையில் முன்வைக்கப்படும் கோட்பாடுகளில் ஒரு பிரிவினரால் தனித் தேசியவாத அணுகுமுறை கோட்பாடாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இன்று இலங்கைத்தீவில் நிகழ்ச்சிப்போக்கில் இருதேசங்கள் நிலவி வருவதாகவும் சிங்களதேசம், தமிழ்த் தேசத்தை ஒடுக்குவதாகவும் இவர்கள் அடிப்படையில் வரையறுக்கின்றார்கள். தமிழ்த் தேசிய இனம் தனியரசொன்றை ஸ்தாபிப்பதன் மூலமே தனது அபிலாசைகளையும் வளர்ச்சிக்கான தனது அவாவையும் பூர்த்திசெய்துகொள்ளவியலும் என முன்வைக்கின்றார்கள்.

நீண்ட காலமாக தமிழ்தேசிய இனம் சிங்கள ஆளும் வர்க்கத்தால் கொரூரமான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்திருப்பதால், இன்று ஒடுக்குமுறையின் உச்ச வடிவங்களை எதிர்கொண்ட நிலையில் தமிழ்த் தேசிய இனம் இருப்பதால் தேசிய விடுதலை இன்றைய உடனடித்தேவையாக இருக்கின்ற நிலைமைகளின் கீழ் இத்தகைய தேசியத்தில் தளம் கொண்டுள்ள கோட்பாடுகள் வேர்விடுவதற்குள்ள புறநிலைமைகள் நீடிக்கின்றன. இக்கோட்பாடுகளே புரட்சிகர சமூகமாற்றத்தை நோக்கிய திசையிலான தெனவும், தேசிய இனங்களின் உழைக்கும் வர்க்கத்தவரிடையே ஐக்கியத்தை நோக்கி செயற்படும் வர்க்க சிந்தனையாளர்கள் யதார்த்த நிலைமைக்கு பொருந்தாத கோட்பாடுகளை கொண்டிருப்பதாக முன்வைக்கும் தனித்தேசியவாதப் பிரிவினரின் அடிப்படை வரையறைகளின் மூலத்தை நோக்குவோமெனில்:

www.tamilarangam.net

சிங்களத்தேசம், தமிழ்த்தேசத்தை ஒடுக்குகின்றது என்று வரையறுப்பதன் மூலம், சிங்கள பெரும்பான்மை இனத்தின் ஆளும் வர்க்கப்பிரிவுகளையும் இனவெறி சக்திகளையும் ஒடுக்கப்படும் உழைக்கும் வர்க்க சிங்கள மக்களிடையே இருந்து பிரித்து அடையாளப்படுத்தாது சிங்கள தேசிய இனம் முழுவதுமே தமிழ்த் தேசிய இனத்தினது எதிரியாக அடையாளப் படுத்துவதன் மூலம் இரு இனங்களிலுமுள்ள உழைக்கும் மக்களின் பொது நலன்களையும், பொது எதிரியையும் அடையாளம் காணமறுத்து உழைக்கும் மக்களின் ஐக்கியத்திற்கு பெரும் கேடு விளைவிக்கின்றார்கள்.

சிங்களப் பெரும்பான்மை இனமக்களும் சரி, தமிழ்ச் சிறுபான்மை இனமக்களும் சரி நீண்டகாலமாக பிற்போக்கான அரசியல் சக்திகள், ஆளும்வர்க்கங்களின் கருத்தாக்கங்களின் ஆதிக்கத்தின் கீழ் வழிநடாத்தப்பட்டு வந்துள்ளபோதிலும் முழுமக்களையும் இனவெறியர்களாக சித்தரிப்பது அப்பட்டமான பொய் என்பதை அண்மைய நிகழ்வுகளே எடுத்துக்காட்டுகின்றன. சிங்கள மக்கள் முற்போக்கான அரசியல் தலைமையால் வழிநடாத்தப் படாமலுள்ளபோதே சமாதானத்திற்கான தமது விருப்பை வெளிப்படுத்துவதைக் காணவியலும். தமிழ்த் தேசியத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் பக்குவத்தை ஒரு புரட்சிகரத் தலைமை அம் மக்களை அணிதிரட்டும்போதே எதிர்பார்க்க வியலும். புலிகளைத் தமிழ்மக்கள் ஆதரிப்பதால் முஸ்லீம் சிறுபான்மை இனத்தை தமிழ்த் தேசிய இனம் ஒடுக்குகின்றது என்றுதான் அர்த்தமா?

பிற்போக்கு ஆளும்வர்க்கங்களால் காலம் காலமாக மக்கள் மீது திணிக்கப்பட்டிருந்த இனவாதக்கருத்துக்கள், பொய்யானபீதிகள். இவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கின்ற வாய்ப்புக்களை தேடுவதற்குப் பதிலாக மக்களை இன அடிப்படையில் கூறுபோடும் அடிப்படைகளை பிற்போக்குசக்திகளது நலனுக்கிசைவான கண்ணோட்டத்தில் வரையறுப்பது தமது கோட்பாடுகளை நிறுவிக் கொள்வதற்கே. சிங்கள உழைக்கும் வர்க்கத்தினரையும், சிங்கள தரகுமுதலாளிய ஆளும் வர்க்கத்தையும் தமிழ்த்தேசிய இனத்திற்கெதிரானதாக ஒன்றாக அடையாளம் காட்டுவதன்மூலம் தமிழ்த் தேசிய இன உழைக்கும் வர்க்க எதிர்கால நலனுக்கு கேடுவிளைவிக்கும் இத் தனித்தேசியவாதிகளது கோட்பாடு எவ்வாக்கத்தினருடையது? எவ்வர்க்கத்தின் நலன்கள் இக்கோட்பாடுகளின் பின்னணியாகவுள்ளது என்பதை இவர்களது இலக்குகளை பகுத்துப் பார்க்கும்போது நாம் காணலாம்.

தனித் தேசியவாதத்தை முன்தள்ளி வருகின்ற இத்தரப்பினர் தேசிய எல்லைகளைக் கடந்து இன்றைய உடனடி அபாயமாக மூன்றாம் உலகநாடுகளை அச்சுறுத்துகின்ற ஏகாதிபத்தியங்களின் அதிகரித்த தலையீடு, காலனியாக்கல் நடவடிக்கைகள், தேசிய விடுதலையானது இன்றைய புதிய உலக ஒழுங்கமைப்பு என்கின்ற நேரடி ஆக்கிரமிப்புத் தன்மைவாய்ந்த ஏகாதிபத்தியங்களது அணுகுமுறை நிலவரங்களக்குள் தன்னை நிலைநிறுத்தக் கூடிய சாதகங்கள் பற்றி ஒன்றுமே கூறாது விட்டிருப்பினும், நாம் ஸ்தல உண்மை நிலவரங்களை ஆழ்ந்து பரிசீலிப்பின் இத் தேசியவாத கோட்பாட்டின் மையசக்திகளாக இருக்கும் வர்க்கப்பிரிவை காணவியலும்.

இன்றைய சாவதேசிய நிலைமைகளின் கீழ், புதிய பாதகமான ஒப்பந்தங்கள் மூலம் ஏகாதிபத்தியங்களிடையே மூன்றாம் உலக நாடுகள் பங்கிடப்பட்டுக் கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் ஏகாதிபத்திய நலன்களுக்கு நேரெதிரான நலன்களைக் கொண்ட தேசிய த னி ய ர சொ ன் று உருவாக்கம் பெற்றுத் தொடர்ந்து நிலை பெறுவது எவ்வடிப்படைகளின் கீழ் சாத்தியமாகக்கூடும் என்பதைக் கவனத்தில் கொள்வோமெனின்: ஏகாதிபத்தியங்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார, இராணுவரீதியிலான அனைத்துத் தாக்குதல்களையும் எதிர்கொண்டு தன்னிறைவான சுயபொருளாதாரத்தை கட்டியமைத்து நீண்டகாலம் தற்காப்பு நிலையில் நீடிக்கக்கூடிய வளங்களையும், ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஊன்றி நிர்க்கின்ற அரசியல், சித்தாந்த, நடைமுறைகள் கொண்ட ஒழுங்கமைப்பு ஒன்றாலேயே ஏகாதிபத்திய எதிர்ப்பை தொடர்ந்து முன்னெடுத்து சமூகமாற்றத்தை ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதிக்கவியலும். தனித்தேசியவாதப் பிரிவினரால் முன்வைக்கப்படுகின்ற தமிழீழத் தனியரசு இன்றைய சாவதேச நிலவரங்களை, ஏகாதிபத்திய நெருக்குதல்களை எதிர் கொண்டு தனது தேசிய நல்களையும் சமூகமாற்றத்திற்கான போராட்டத் திசை வழியையும் காப்பாற்றிக் கொள்வதற்கான அடிப்படைகளை பூர்த்திசெய்யும் வலுக் கொண்டதாக இல்லையென்பது வெளிப் படையான, நிதர்சனமான உண்மையாக வுள்ளது.

சிறியதொரு நிலப்பரப்பும், தன்னிறைவான பொருளாதாரத்தை, தொழித்துறைகளை கட்டி வளர்க்கக்கூடிய இயற்கைவளங்களை தன்னகத்தே கொண்டிராத ஈழப்பிரதேசம் ஏகாதிபத்தியங்களது நெருக்குதல்கள், தடைகள், இந்திய பிராந்திய வல்லரசின் ஆக்கிரமிப்பு மனோபாவம் அனைத்தையும் எதிர்கொண்டு புரட்சிகர அரசியலின் வழியே தனது தேசியதனியரசை இட்டுச் செல்லுமென்பது எங்ஙனம் நடைமுறை யதார்த்தத்துடன் இணைந்த உண்மையாக இருக்கமுடியும்?

இன்றைய சர்வதேச நிலைமைகளில் ஏகாதிபத்திய நலன்களக்கு சேவகம் புரிகின்ற தனியரசுகளே உருவாகி தம்மை நிலைநிறுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தனியரசொன்றை நிறுவுதல் சாத்தியப்பாட்டக்குரியதொன்று - ஏகாதிபத் தியங்களுக்கு, இன்றைய சுரண்டல் பொருளாதார அமைப்பிற்கு நேரெதிரான நலன்களைக்கொண்ட புரட்சிகர அரசி யலைப் பற்றிநின்று தமிழ்த் தேசிய விடுதலைக்கு தனியரசொன்றை அமைத்து அப்போராட்டத்தை சமூகமாற்றத் திசையில் இட்டுச்செல்லவியலும் - எனக் கோட்பாட் டுருவாக்கம் செய்வது சுத்தமான ஏமாற்றே யொழிய நடைமுறைகளுடன் இணைந்த உண்மையல்ல. இக்கோட்பாட்டுருவாக்கத் தின் பிரதிநிதிகள் இன்றைய சர்வதேச நிலவரங்களை, ஏகாதிபத்தியங்களது காலனியாக்கல் நடவடிக்கைகளை கிரகித் துக் கொள்ளாதவர்களல்ல. மிகமுக்கியமா உண்மை எதுவெனின்:

> இத் தனித்தேசியவாதிகளது அரசியல் நோக்கம் உழைக் கும் வர்க்கத்தவர்களின் நலன் களை வென்றெடுக்கின்ற சமூ கமாற்றத்தைச் சாதிக்கின்ற புரட்சியல்ல. அவாகளது அரசி யற் குறிக்கோள் தமிழ்த் தேசியத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியே - இன்றைய ஈழத் தின் மந்தநிலை முதலா ளித்தவ வளர்ச்சிக் கட்டத்தை தேசிய முதலாளித்துவப்புரட் சியாக பூர்த்திசெய்வதே. தமிழீழத் தனியரசு உருவாகு வது தமது ஆற்றல்களைக் கட்டவிழ்த்து விடத் துடிக்கும் இத்தேசிய முதலாளித்துவப் பிரிவின் நலன்களைப் பூர்த்தி செய்யும். - தேசியஇனங்களின் உழைக்கும் வர்க்கங்களை எதிரிகளாகப் பிரித்துவிடும் இவர்களது கோட்பாட்டுரு வாக்கம், இவர்களது எதிர் கால நலன்களை தொடர்ந்து உத்தரவாதப் படுத்தும் கோட் பாடுகளே.

தேசியம் தன்னளவில் குறித்தளவு சுயாதீனமான இயக்கப்பாட்டைக் கொண்டி ருக்கின்றபோதிலும் அதன் உருவாக்கத் துடன், அதன் தொடர்ச்சியுடன் பொருளாதாய நலன்கள், வர்க்கங்கள் பின்னணியில் செயற்படுவதை நிராகரித்து, பொருளாதாரக் காரணிகளுக்கும் தேசியம், மதம் போன்றவை உயிர்ப்பிக்கப் படுதலுக்குமிடையேயான தொடர்பை மிக மலினப்படுத்தி அவற்றின் சுயாதீன இயக்கப்பாட்டை முழுமையானதாகக் காட்டி பொருளாதாரக் காரணங்களிலிருந்து தேசியத்தின் இயக்கப்பாட்டைப் பிரித்து விடும் கோட்பாடுகளை இத் தனித்தேசிய வாதிகள் நிறுவிவருவது புரட்சிகர உழைக்கும் வர்க்கப்பிரிவுகளை தனித் தேசியவாதத்துள் அமிழ்த்துவிடவே. இத் தனித்தேசிய வாதப்பிரிவினர் சமூமாற்றப் போராட்டத்தை கட்டியமைப்பதற்கு இன்றி யமையாததாகவிருக்கும். தேசிய இனங் களின் புரட்சிகர உழைக்கும் வர்க்கங்களி டையேயான ஐக்கியம், இணைவு போன்றவற்றில் சிறிதும் பார்வையைக் கொண்டிராது 'தடாலடியாக தனியரசு ஒன்றே தமிழ்க் கம்யூனிஸ்டுக்களின் புரட்சிப்பாதையென்று சாதித்துவருவதன் நோக்கத்தை நாம் சீர்தூக்கி நோக்கினால், இவர்களது நோக்கம் தமிழ்த் தேசியத்தின் தேசிய முதலாளித்துவ நலன்களை, அபிலாசைகளை வென்றெடுக்கின்ற போராட் டத்தை முன்னெடுப்பதேயன்றி சமூகமாற் றத்திற்கான போராட்டமோ அதற்கு ➲

www.tamilarangam.net

இன்றியமையாத முன்நிபந்தனையாகவுள்ள தேசிய இனங்களிலுள்ள உழைக்கும் வர்க்கத்தினரின் ஐக்கியத்தைச் சாதிப்பதோ அல்ல என்பதை அவர்களது கோட்பாடுகள், கருத்து வெளிப்பாடுகளிலிருந்து ஐயமின்றிக் காணமுடியும்.

தமிழ்த் தேசிய இனம் எதிர்நோக்குகின்ற அடுத்தகட்ட சமூகவளர்ச்சியான முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்க விளைகின்ற இத்தரப்பினர் அதைச் சமூகமாற்றப் பாதையாகவும் தமிழ் கம்யூனிஸ்டுக்களின் இன்றைய போராட்ட வடிவம் இதுதான் எனவும் சாதிக்கின்றனர். இவ்வாறு சாதிப்பதற்கான நோக்கங்கள் மிக வெளிப்படையானவை. தேசியமுதலாளித்துவ நலன்களுக்கான போரிற்கு புரட்சிகர வாக்கப் பிரிவுகளின் உழைப்பையும், தியாகத்தையும், போரிடும் ஆற்றலையும் பயன்படுத்தி அவ்வர்க்கங்களது போராட்டங்களின் அறுவடையை தமது வர்க்கநலன்களின் கீழ் தக்கவைத்துக் கொள்வதேயன்றி வேறில்லை. தமிழ்த் தேசியத்திலுள்ள புரட்சிகரவர்க்கப்பிரிவினர், புரட்சிகர சிந்தனையாளர்கள், சமூகமாறுதலுக்கான புரட்சிப்பாதையை வெறுமனே உச்சரித்துக்கொண்டு ஆத்மார்த்தமாக புரட்சிகர வர்க்கங்களின் நலனகளுக்கெதிரான தேசிய முதலாளித்துவ நலன்களைக்கொண்ட கோட்பாடுகளை அனைத்து மட்டங்களிலும் உருவாக்கிவரும் இத் தனித்தேசியவாதிகளது வர்க்க அடிப்படையை அடையாளம் காண்பதில் தவறிழைக்கக்கூடாது.

இலங்கைத்தீவின் தேசிய இனங்களிலுள்ள பரட்சிகர வர்க்கங்களின் ஐக்கியத்திற்கும், சமூகமாறுதலுக்கான போராட்டப் பாதைகளுக்கும் இவர்களது கோட்பாடுகள் ஊறுவிளைவிப்பதை புரட்சிகர சக்திகள் தெளிவாக அடையாளம் காணவேண்டும்.

இத் தனித்தேசியவாதப் பிரிவினர் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய முதலாளித்துவப் புரட்சி முற்போக்கான சமூக வளர்ச்சி நிலையைக் கொண்டதாகையால் இவர்கள் வரலாற்றில் முற்போக்கான பாத்திரத்தையே வகிக்கின்றனர். அவர்கள் தமிழ்த் தேசியத்தின் சமூகவளர்ச்சியை முன் நகர்த்திச் செல்கின்றவர்களாக இருக்கின்றார்கள் என்பது உண்மையே எனினும் அவர்களது நோக்கமான தேசிய தனியரசு நிறுவுவதும், இன்றைய ஈழத்தின் குறைவிருத்தி முதலாளித்துவ உற்பத்திக்கட்ட உற்பத்தி உறவுகளக்கெதிரான போராட்டமும், தேசிய முதலாளித்துவ புரட்சியை பூர்த்தியாக்கும் அவர்களது முற்போக்குப் பாத்திரமும் இன்றைய சர்வதேச நிலமைகளின் கீழ் ஏகாதிபத்திய பொருளாதாரக் கட்டமைப்பின் எல்லை கடந்த அதீத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் ஆதிக்கத்தின் கீழ் நிலைபெற முடியாத சாதகத்தையே கொண்டுள்ளது. எளிமையாகக் கூறினால் இன்றைய சர்வதேச நிலைமைகளின் கீழ் ஈழம்போன்ற சிறியதான, பாரியவளங்களைக் கொண்டிராத தேசத்தில் தேசிய முதலாளித்துவம் தேசியநலன்களை வென்றெடுக்கின்ற போராட்டத்திற்குத் தலைமையளித்து வெற்றியைப் பெறமாட்டாது. இன்றைய புதிய நிலைமைகளில் ஏகாதிபத்திய நலன்களுக்குக் கீழ்ப்படிந்து சமரசப்பட்டுப் போய்விடுகின்ற உள்ளார்ந்த ஆற்றல்களையே தேசிய முதலாளித்துவம் கொண்டுள்ளது.

இன்றைய புதிய உலக ஒழுங்கமைப்பு என்கின்ற, ஏகாதிபத்தியத்தின் ஆதிகரித்த ஆதிக்கக் கட்டத்தில் ஏகாதிபத்திய பொருளாதாரக் கட்டமைப்பின் அரசியல், பொருளாதார, கலாச்சார ஆக்கிரமிப்புகளிலிந்து தேசியநலன்களையும், ஏகாதிபத்திய பொருளாதார அமைப்புக்கெதிரான சமூகமாற்றப் புரட்சிப் போராட்டங்களையும் முன்னெடுத்துச் செல்லும் வலிமையும், வரலாற்றுப் பாத்திரமும் கொண்டதாக புரட்சிகர உழைக்கும் வாக்கங்களும், அவற்றின் புரட்சிகர சித்தாந்தங்களுமே திகழ்கின்றன. புரட்சிகர உழைக்கும் வர்க்கங்களை கூறுபோடும் தேசியம், மதம்போன்ற வேறுபாடுகளைத் தீர்த்துக்கொண்டு சர்வதேசிய நோக்கம் கொண்டதான சமூக மாறுதலுக்கான புரட்சியைக் கட்டமைக்க புரட்சிகர வர்க்கங்களாலேயே இயலும். தனித்தேசிய வாதத்துடன் திருப்தியுறும் தேசிய முதலாளித்துவ சக்திகளால் இன்றைய சர்வதேச யதார்த்த நிலைமைகளை எதிர்கொள்ளும் போ ர ணி யை ஒருபோதும் உருவாக்கிடவியலாது.

இன்றைய கட்டத்தில் ஈழத் தேசிய இனத்தின் அனைத்து வர்க்கங்களினதும் பிரதான முரண்பாடாக இன முரண்பாடே நிலவுகின்றது. இம்முரண்பாட்டைத் தீர்க்கின்ற தேசிய விடுதலைப்போரை ⮌



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னெடுக்க வேண்டியதும் அப்போரை சமூக மாற்றப் பாதையின் திசையில் நகர்த்திச் செல்வதற்கும் தேசிய விடுதலைப் போரிற்கு புரட்சிகர வாக்கங்களினது தலைமையை அளிப்பதும் அவசியமானது. தேசிய விடுதலைப்போர் புரட்சிகர வர்க்கங்களினது நலன்களை உத்தரவாதப்படுத்துவதாயும் ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஊன்றிநிர்க்கவும் வேண்டுமெனின், ஏகாதிபத்திய நலன்களுக் கெதிராக தொடர்ந்து தன்னை நிலை நிறுத்த வேண்டுமெனின் மற்றைய இனங்களின் உழைக்கும் வர்க்கத்தினருடன் ஐக்கியத்தைச் சாதிப்பது அவசியமானது. மற்றைய இனங்களின் புரட்சிகர சக்திக ளுடன் ஒன்றுபடுவதன் மூலமும், எமது பிராந்தியத்திலுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகர சக்திகளுடன் ஐக்கியப்படுவதன் மூலமே நீண்ட, நெடிய, கடினமானதான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் நாம் உறுதியுடன் தர்க்காத்து நிற்க இயலும்.

சமூக மாற்றத்திற்கான புரட்சிப்பாதையை நாம் முன்னெடுத்தச் செல்லவேண்டுமெனின் ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக ஊன்றிநிற்பது அவசியமாகிறது. ஏகாதிபத் திய எதிர்ப்புப்போரே புரட்சிகர வர்க்கப் பிரிவுகளின் நலன்களை உத்தரவாதம் செய்யவல்லது. உழைக்கும் வர்க்கங்க ளிடையே ஐக்கியத்தையும், இந்தியா போன்ற எமது பிராந்தியத்தின் அயல்நாடுகளின் புரட்சியாளர்களுடன் ஐக்கியத்தையும் சாதிக்கும் திசையில் செயற்படும் சக்திகளே ஏகாதிபத்திய எதிர்ப்புப்போரிற்கு அவசியமான உள் ளார்ந்த சக்திகளை, அடிப்படைகளைப் பூர்த்திசெய்யும் வல்லமை கொண்டவர்கள். தனித் தேசியவாதக் கண்ணேட்டத்துக்குள் மூழ்கி மற்றைய தேசிய இனங்களை எதிரிகளாக வரையறுத்து, தேசிய இனங்க ளுக்கிடையே ஐக்கியத்திற்கான வாய்ப்புக் களை மறுத்துவிட்டு தனியரசு கோருவது உழைக்கும் வர்க்கப் பிரிவுகளுக்குப் பாதகத்தையே ஏற்படுத்தும். இன்றைய நிலைமைகளில் ஈழம் ஒரு தனியரசாக மாறவியலுமெனின் அது இஸ்ரவேல் போல அமைய முடியுமேயொழிய சுயாதிபத் தியமான தேசிய அரசாக ஏகாதிபத்திய எதிர்ப்புக்கொண்டதாக நீடிக்கின்ற நிலைமை இல்லையென்பது வெளிப்படை யானது.

ஆகவே தமிழ்த் தேசிய விடுதலைப் போரை சமூகமாற்றப் பாதையில், மனிதகுலத்தின் நலன்களுக்கான திசையில் முன்னெடுக்க விரும்புகின்ற புரட்சிகர சக்திகள் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை கையிலெடுத்துப் போராடும் போதே அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக தமிழ்த் தேசிய இன மக்களை அணிதிரட்டி களத்தில் நிற்கின்றபோதே பெரும்பான்மை இன சிங்கள மக்களினது ஆளும் வர்க்கங்களையும், புரட்சிகர உழைக்கும் வர்க்கத்தையும் வேறுபடுத்தி இனம்கண்டு புரட்சிகர வர்க்கங்களுடன் ஐக்கியத்திற்காக பாடுபட வேண்டும். தமது தமிழ்த் தேசியத்தின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுத்தப் போராடும் போதே ஏகாதி பத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் மற்றைய இன புரட்சிப்பிரிவினருடன் இணைந்து போராடவேண்டியதும், அவர்களுடன் ஐக்கி யப்படுவதில் கவனம் குவிக்கவேண்டியதும் அவசியமாதாகும். தேசியப் போராட்டக் களத்தில் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திப் போராடும் போதே இலங்கைத் தீவில் சமூகமாற்றத்திற்கான போரில் அம் மற்றைய இன — புரட்சிகர சக்திகளுடன் எம்மை இணைத்துக்கொள்ள வேண்டும்.

இப்போதைய தமிழ்த் தேசிய இன உழைக்கும் வர்க்கத்தவர்களின் நலன் களையும், தமிழ்த் தேசியத்தின் நலன் களையும் பூர்த்திசெய்யவல்லது. தமிழ்த் தேசிய உழைக்கும் வர்க்கத்தவர்களின் நலன்களுக்காக சமூகமாற்றப் புரட்சிப் பாதையில் முற்போக்கு முகாமிலிருந்து தனித்தேசியவாத இருள் படர்ந்து வருகின்றது.

இலங்கைத்தீவின் இனங்களின் புரட்சிகர சக்திகளிடையே, புரட்சிகர வர்க்கங்க ளிடையே ஐக்கியத்தை நோக்கிச் செயற்படுகின்ற தமழ்ப் புரட்சிகர சக்திகளது பிரகாசமான சர்வதேசியநோக்கு தனித்தேசியவாத இருளிலிருந்து தமிழ் புரட்சிகர வர்க்கங்களை மீட்டு புரட்சிப் பாதையில் அணிதிரட்டிச் செல்லுமென்பதில் ஐயமில்லை.

**ஆதவன்**
**கனடா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரண்டாம் உலக மகா யுத்தத்தின் 50-வது வருட கொண்டாட்டங்களின் ஊடாக மறைக்கப்பட்டு வரும் உண்மைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"1940ம் ஆண்டு பிரான்சின் தோல்வி ஒரு அசாதரணமான சம்பவமாகும். பொதுவான சக்திகள் சமன் நிலையைப் பார்த்தால் டாங்கிகள், பீரங்கிகளைப் பொறுத்த மட்டில் பிரான்ஸ்-பிரிட்டீஷ் படைக்கு மேம்பாடு இருந்தது என்பது நமக்கு இப்போது தெரியும். விமானப் படையில் இவற்றின் பலவீனம் இவ்வளவு விரைவான தோல்வியை முன்கூட்டியே கூறுமளவிற்கு அவ்வளவு அதிகமாக இல்லை."

— இரண்டாவது உலக யுத்தத்தின் வரலாறு.—

இத் தோல்விக்கு முக்கிய காரணம் முதலாவது உலக யுத்தப் பாணியில் ஜெர்மனி அதே திசையில் தாக்கும் என எதிர்பார்த்திருந்தமே. இந்தவகையில் அவ் எல்லைகளில் படைகளை குவித்தும் இருந்தனர். ஆனால் ஜெர்மன் மிக நெருக்கமான காடுகள், சகதிகள் கொண்ட வழிகளின் ஊடாக பிரான்சுக்குள் புகுந்தது. ஜெர்மனி வருமென எதிர் பார்த்திருந்த இடங்களில் ஹாலந்து இராணுவத்தின் 11 டிவிஷன்களும், 124 விமானமும், பெல்ஜிய இராணுவத்தின் 23 டிவிஷன்களும், 410 விமானங்களும் நிறுத்தப்பட்டு இருந்தது.

மே 10ம் நாள் ஹிட்லரின் அறைகூவல் வாசிக்கப்பட்டது. இதில் பிரிட்டீஷ், பிரான்ஸ் ஆகியவை துரோகக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக குற்றம் சாட்டியது. "இன்று துவங்கும் சமர் அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு ஜெர்மன் இனத்தின் விதியை நிர்ணயிக்கும்." என அறிவிக்கப்பட்டது.

1940 மே 10ம் திகதி காலை 5.30க்கு 2000 பாஸிச விமானங்கள் 70 பிரான்ஸ், பெல்ஜிய, ஹாலந்து விமானத்தளத்தின் மீது குண்டுகளைப் பொழிந்தது. 1940 மே 12ம் திகதி தொடர்ச்சியான தாக்குதலின் பின்னர் மே 12ல் ஹாலந்து சரணடைந்தது. இதன் அரசாங்கம் லண்டனுக்குத் தப்பி ஓடியது.

பெல்ஜியம், பிரன்சின் பல பகுதிகளை ஊடுருவிய ஜெர்மனிய இராணுவம் நேச நாடுகளின் படைகளை இரண்டாகப் பிரித்து கரையோரமாகத் தள்ளிச் சென்றது. இத்தாக்குதலை ஓட்டி ஹிட்லரின் பீல்ட்மார்ஷல் ரோம்மல் கூறுவதைப் பார்ப்போம்

"1940ஆம் ஆண்டு பிரான்ஸில் எங்களுடைய 10 கவச டாங்கி டிவிஷன்கள் தாக்குதலை முடித்தன. பிரிட்டீஷ்-பிரஞ்ச் படைத் தலைமையின் செயலின்மை இந்த வெற்றியை இலகுவாக்கியது."

மே 20ல் பிரான்ஸ் நிபந்தனை அற்ற சரணடைவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு சரணடைந்தது. அத்துடன் தப்பியோடும் படலம் ஆரம்பித்தது. ஆங்கிலேயர் 3,38,000 போர்வீரர்களை பிரிட்டனுக்கு அனுப்புவதில் வெற்றி பெற்றனர். இதில் ஆங்கிலேயர் 2,15,000பேர், பிரன்சுக்காரர் 1,23,000 பேர் ஆகும். ஜெர்மனி 40,000 பேரை சிறைபிடித்தது.

பிரிட்டீஷ் தரப்பில் 68,000 பேர் கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கையில் பங்கு கொண்ட 224 பிரிட்டீஷ் கப்பல்கள், 6 நாசகாரிக் கப்பல்கள், மூழ்கடிக்கப்பட்டன. ஜெர்மனி 140 விமானத்தை இழந்தது. பிரன்சுக் கரையில் பெருமளவு போர்த் தளவாடங்களை கைவிட்டே பிரிட்டீஷ், பிரான்ஸ் தப்பி ஓடினர்.

படைகள் சேதமின்றி வெளியேற அரசியல் காரணமே பிரதான பங்கு வகித்தது. தப்பி ஓடுபவர்கள் மீது தாக்குதலை நடத்த வேண்டாம் என்று "நின்றுவிடும் கட்டளையை" போட்டது என்பது, பிரான்ஸ் முறியடித்தது என்பது, பிரிட்டனை நிபந்தனை இன்றி ஒப்பந்தத்தைச் செய்ய ஹிட்லர் விரும்பினான். இதையொட்டி ஜெர்மனிய காப்டர் தனது நாட்குறிப்பில் எழுதியதாவது:

.........பிரதான எதிரி......... எங்களுக்கு-பிரான்ஸ் உலகின் செல்வாக்கு மண்டலங்களை ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

பகிர்ந்து கொள்வதன் அடிப்படையில் நாங்கள் பிரிட் டனுடன் உடன்படிக்கையைத் தேடுகின்றோம்."

– கால்டர் யுத்த நாட்குறிப்பு, தொகுதி 1. –

பிரன்ஸ் மீதான தாக்குதலில் பல இடங்களில் மக்களும் இணைந்துபோர்வீரர்களுடன் தீரத்துடன் போராடினர். இருந்தபோதும் உயர்மட்டத் தலைமையின் துரோகமும், படைத்தலைமையின் செயலின்மையும், தோல்வியில் இட்டுச் சென்றது.

யூன் 14ம் திகதி எந்தவித எதிர்ப்பும் இன்றி ஜெர்மன் இராணுவம் பாரிஸைக் கைப்பற்றியது.



Parisians scatter as German snipers open fire, August 1944 (U.S. National Archives photo)

இந்த நிகழ்வு பிரன்சு மக்களின் துரோகிகளான அரசியற் பிரமுகர்களின் சூழ்ச்சியில் நிகழ்ந்து ஏறியது. கம்யூனிஸ் கட்சி பாரிஸைக் காப்பாற்ற அழைப்பு விட்டிருந்த நிலையில், பிரன்சுத் துரோகிகள் கம்யூனிஸ் தலைமையில் போராட்டம் நடைபெற்றால், கம்யூனிஸ் கட்சியின் செல்வாக்கு அதிகரிக்குமெனக் கருதி, படையில் கம்யூனிஸ்ட் சார்பு தலைமைகளை மாற்றி அமைத்ததுடன், பரிசைவிட்டு து ருக்கிக்கு ஓடினர். பரிஸில் இருந்த சனத்தொகையில் 3/4பங்கு வெளியேறியது.

1940 யூன் 10ம் திகதி பிரிட்டீஷ் பிரான்சுக்கு எதிராக இத்தாலி யுத்தப் பிரகடனம் செய்தது. இது பிரான்ஸ் யுத்தத்தில் பங்கு கொள்ளவும், இதனூடாக தோல்வியடையும் பிரான்சில் பங்குகளைக் கேட்டு பேரம்பேசவும் யுத்தம் அவசியமாக இத்தாலிக்கு இருந்தது. இதையொட்டி முஸ்ஸோலீனி கூறியதைப் பார்ப்போம்.

"யுத்தத்தில் பங்கேற்றவன் என்ற வகையில் சமாதான மாநாட்டு மேசையில் உட்கார எனக்கு ஒருசில ஆயிரம் இறந்தவர்கள் மட்டும் போதும்."

-H. A zeau, La guerre fraco-italiana. Juine 1940, Paris, 1967,p.41.-

1ம் யுத்தத்தில் ஜெர்மன் தோல்வி அடைந்தபோது 1918 நவம்பர் 11ம் திகதி புகைவண்டிப் பெட்டியில் கப்பியேன் காட்டில் காய்ஸர் ஜெர்மனியின் சரணகதியை ஏற்றாறோ அதே பெட்டியில் பிரன்சு பெட்டேன் அரசாங்கம் சரணாகதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இவ்வொப்பந்தத்தின் இரண்டாம் நாள் இத்தாலியுடன் பிரான்சு உடன்படிக்கை செய்தது. இதன்மூலம் 832 ச.கி.மீற்றரை இத்தாலி தனதாக்கியது.

இதே நேரம் லண்டனில் டெகோலின் தலைமையில் 'சுதந்திர பிரான்ஸ்' எனும் தேசபக்த எதிர்ப்பு இயக்கம் உருவாக்கப்பட்டது. 1941 மேமுதல் பிரன்சுக் கம்யூனிஸ்ட் கட்சி கெரிலாக் குழுக்களை உருவாக்கியது. பிரன்சு மீதான தாக்குதலில் 84 ஆயிரம் பிரன்சு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 15 லட்சத்து 47ஆயிரம் பேர் சிறை பிடிக்கப்பட்டனர். ஜெர்மனிய தரப்பில் 45ஆயிரத்து 500பேர் கொல்லப்பட்டனர். ஒருலட்சத்து 11 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

1940 மே 10ம் திகதி சேம்பர்லேனின் அரசாங்கத்தின் வீழ்சியுடன் விசர்ச்சிலின் அரசாங்கம் பதவியை ஏற்றது. 1940 யூலை 16ம் திகதி ஹிட்லர் கிரேட் பிரிட்டன் மீது தாக்குதலைத் தொடுக்கும் கட்டளையில் கையெழுத்திட்டான். இது கடல் சிங்கம் எனப் புனைப்பெயர் பெற்றது. 1940 ஓகஸ்ட் நடுப்பகுதியில் பிரிட்டன் மீது தொடங்கிய பரந்தளவு தாக்குதல் 1941 மே 11.வரை நீடித்தது. பிரிட்டன் மீதான தாக்குதலை தொடங்கத்திட்டமிட்ட ஹிட்லர் பின் சோவியத் மீதான தாக்குதலை முதன்மைப்படுத்தியதால் பிரிட்டன் மீதான படையெடுப்பைக் ➲



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கை விட்டான்.

1940 பேர்லின் உடன்படிக்கையின் ஊடாக இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி கூட்டு உடன்பாட்டை உருவாக்கின. பிரிட்டன் மீது 1940 ஒகஸ்ட் 13.முதல் செப்ரம்பர் 6வரை ஹிட்லர் ஆதிக்கத்தைப் பெற விமானத்தளங்கள் மீது தாக்க முயன்றது. நாளொன்றுக்கு 1000முதல் 1800 விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

1940 செப்ரம்பர் 7.முதல் நவம்பர் 13.வரை பிரிட்டீஸ் மக்களை அச்சுறுத்தும் வகையில் நகரங்களைத் தரைமட்டமாக்க முனைந்தது. இதில் காலை 7.00மணி முதல் இரவு 8.00மணி வரைக்கும் 300டண் கனவெடிகுண்டுகளையும், 13,000 எரிகுண்டுகளையும் வீசினர்.

அடுத்த இதழில் தொடரும்.......

நொறுக்கப்பட்டு, எரிக்கப்பட்ட ஜெர்மானிய கவசங்களின் அழிபாடுகள், பிரான்ஸ், 1944

U.S. Department of Defense



32ம் பக்கத் தொடர்ச்சி

## பிரான்சில் படுகொலை..

போட்டியிடுகின்றது. சராசரியாக 10 வீத ஆதரவைத் தொடர்ச்சியாகப் பெற்றுவரும் இக் கட்சி வெளிநாட்டவர்களுக்கு எதிராக பகிரங்கமாகவே இயங்கி வருகின்றது.

பிரான்சில் வாழும் வெளிநாட்டவர்களில் போத்துக்கல் நாட்டைச் சேர்ந்தோரே அதிக மாகக் காணப்படினும், தேசிய முன்னணியின் பிரச்சாரம் இவர்கள் மீதல்லாது அரபு, மற்றும் கறுப்பினத்தோர் மீதே குறிவைதைத்து நடாத் தப்படுகின்றது. கறுப்பு-வெள்ளை என்ற ஒரே யொரு எல்லைக்கோடு மட்டுமே இவர்களின் அடிப்படையம்சமாகும்.

தேசிய முன்னணியின் பேச்சாளர்கள் இப் படுகொலையை தற்செயலான விபத்து எனக் கூறிவருவதுடன், எந்தவித அனுதாபத்தையும் வெளியிட மறுத்தனர். இந்நிலையில் சுட்டுக்

கொல்லப்பட்ட அடுத்த நாள் அவ்விடத்தில் 500 பேர் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கினர். தொடர்ச் சியாக முன்னெடுக்கப்பட்ட இப்போராட்ட நடவ டிக்கையானது, ஒவ்வொரு நாளும் எண் ணிக்கையால் பெருகிக்கொண்டே இருந்தது. இறுதி நாளன்று மாசெய்யில் மட்டும் 20 ஆயிரம் பேர் அப்போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

தேசிய முன்னணியைத் தடைசெய்யக் கோரி நடந்த இந்தப் போராட்டம் பிரான்சின் பல பாகங்களிலும் உணர்வுபூர்வமாக நடத்தப்பட்டது. வளர்ந்து வரும் இந் நாசிகள் இன்றைய உலகப் பொருளாதார நெருக்கடிகளூடாகவே ஆட்சிக்கு வரவும், மூன்றாம் உலகயுத்தத்தை நடத்தவும் தீவிரமாக முனைந்தவாறே உள்ளனர். இவற்றைத் தடுத்து நிறுத்த மாற்று அரசியல் சக்திகள் புரட்சிகர வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும். இன்று புரட்சிகர சக்திகளைத் தேடியும் கண்டுபிடிக்க முடியாத சீரழிந்த நிலையில், மூன்றாம் உலகப் போரின் அழிவின் விளிம்புக்கு உலகம் உருட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

www.tamilarangam.net



# அமெரிக்கா சைவப் புலியா?

செயற்கைக் கோள் உதவியினை மட்டுமே கொண்டு குறி தப்பாது தாக்கக் கூடிய நவீன வகை குண்டுகளையும், போர்க்களத்தில் எதிரிப்படை வீரர்களைக் காயப்படுத்தாது கண்களை மட்டுமே குருடாக்கக் கூடிய 'லேசர்" துப்பாக்கிகளையும் அமெரிக்கா தயாரிக்கிறது. மேலும் ஈராக்கைத் தாக்கி அழித்ததைப் போன்ற நவீன மின்னணுவியல் போர்ச் சாதனங்களை வரும் பத்தாண்டுகளில் இன்னும் அதிக அளவில் தயாரித்துக் குவிப்பதற்கான திட்டம் ஒன்றையும் அமெரிக்க காங்கிரசு அங்கீகரித்திருக்கிறது. "பனிப்போர் சகாப்தம் முடிந்துவிட்டது: இனி அமைதி" எனக் கூத்தாடியவர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

நன்றி- புதிய ஜனநாயகம்

# 'ஷாரியத்' என்னும் சாத்தான்



மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறுவன் சலாமத் மாசிக் (வலது) மற்றும் ரஹ்மத் மாசிக்.

பாக்கிஸ்தானைச் சேர்ந்த சாலாமத் மாசிக் என்ற 14 வயது சிறுவனுக்கு "இஸ்லாம் மதத்தையும் நபிகள் நாயகத்தையும் இழிவுபடுத்தி விட்டான்;" என்ற குற்றச் சாட்டின் பேரில "ஷாரியத்" சட்டப்படி மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களின் முன்பு இச் சிறுவன் மசூதியொன்றின் சுவற்றில் மதத்தை இழிவுபடுத்தும் வாசகங்களை எழுதியதாக ஒரு மதகுருமார் இச் சிறுவன் மீது குற்றஞ் சுமத்தியதை அடுத்து இவ் வழக்குத் தொடரப்பட்டது. "அச் சிறுவன் எழுதப் படிக்கத் தெரியாதவன்" என்ற எதிர்க் கட்சி வக்கீலின் வாதத்தை தீர்ப்பு வழங்கிய நீதிபதி கண்டு கொள்ளவேயில்லை.

நன்றி- புதிய ஜனநாயகம்

# பிரான்சில்.. நாசிகளின் முதற் படுகொலை

கடந்த மாசி மாதம் 21ம் நாள் இரவு மாசெயில் என்ற இடத்தில் கறுப்பின மாணவன் ஒருவன் நாசிகளால் படுகொலை செய்யப்பட்டான்.

17 வயதுடைய இந்தக் கறுப்பின மாணவன் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பியோடிய கொலையாளி பொலீசாரிடம் வகையாக மாட்டிக் கொண்டான்.

F.N என்றழைக்கப்படும் தேசிய முன்னணியின் உறுப்பினரான இக் கொலையாளி லூபென் என்பவரைத் தலைவராக வரிந்து கொண்டவன். சட்டபூர்வமாக இயங்கிவரும் இத்தேசிய முன்னணிக் கட்சி நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலிலும்

(தொடர்ச்சி பக்கம் –31)

வாசகர்களே ! உங்களிடமிருந்து ஆக்கங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்

*தொடர்பு முகவரி:*
"SAMAR"
87,RUE DE COLOMBES
92600 ASNIERES SUR SEINE
FRANCE

*சந்தா அனுப்ப வேண்டிய தபாற்கணக்கு*
2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUEES
FRANCE

| | சந்தாவுக்கான அன்பளிப்பு | |
|---|---|---|
| பிரான்ஸ் | 6 பிரதிகள் | 60 F |
| | 12 பிரதிகள் | 120 F |
| ஐரோப்பிய நாடுகள் | 6 பிரதிகள் | 100 F |
| | 12 பிரதிகள் | 200 F |
| ஏனைய நாடுகள் | 12 பிரதிகள் | 225 F |

சமர்15 வெளியீடு: தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் பங்-சித்தி (பதிவு செய்யப்பட்டது 3/16956)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்